332

# திருவீழிமிழலைத் திருப்பதிகங்கள்

வண்தாமரை மலர்மேல்
மட அன்னம் நடைபயில
வெண்தாமரை செந்தாதுதிர்
வீழிம்மிழலையே.

- சம்பந்தர்.

332
1-50.



Q23:38.2116
N50
109649

தருமபுர ஆதீனம்.

வெளியீடு எண் 213.

உ

குருபாதம்

# திருவீழிமிழலைத் திருப்பதிகங்கள்

[ குறிப்புரைகளுடன் ]

இது

தருமபுர ஆதீனம் உ௬-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளவர்கள்

திருவுள்ளத்தின்வண்ணம்

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1950.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் | 1 |
| 2. | திருநாவுக்கரசர் தேவாரம் | 61 |
| 3. | சுந்தரர் தேவாரம் | 95 |
| 4. | திருவாசகம் | 100 |
| 5. | திருவிசைப்பா | ,, |
| 6. | திருப்பல்லாண்டு | 106 |
| 7. | பதினொராந்திருமுறை | 107 |
| 8. | பெரியபுராணம் | ,, |
| 9. | திருப்புகழ் | 108 |

உ

சிவமயம்

# தலச்சிறப்பு

திருவீழிமிழலை, சோழவளநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள அறுபத்தொன்றாவது தலம். மிழலை என்பது நாட்டின் பகுதி. வீழி தலவிருக்ஷம். அதனால் திருவீழிமிழலை எனப் பெயர்பெற்றது.

இத்தலத்தில் விஷ்ணுமூர்த்தி சிவபூசைசெய்து, தேவலோகத்திலிருந்து விமானம் கொண்டுவந்து அமைத்து வழிபட்டுச் சக்கராயுதம்பெற்றார் என்பது புராண வரலாறு.

சம்பந்தரும் அப்பரும் அடியார்களுடன் தனித் தனி இருபெருமடங்களில்தங்கி, ஈசனளித்த காசு கொண்டு பரமனடியார்கள் யாவருக்கும் சோறளித் ததும் இத்தலத்திலேதான்.

இத்தகைய சிறந்த இத்தலம் திருவாவடுதுறை ஆதீனத்தின் பரிபாலனத்திற்குட்பட்டு விளங்கு கின்றது.

பதிகம்:- திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகம் பதினொன்கும், திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் எட்டும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் ஒன்றும்

ஆக இருபத்துமூன்று தேவாரப் பதிகங்கள் இத் தலத்திற்குள்ளன. சேந்தனாருளிய திருவிசைப்பாப் பதிகம் ஒன்றும் இருக்கிறது. மற்றும் திருமுறை களில் ஆங்காங்கும் திருமால் சக்கரம்பெற்றவரலாறு பாராட்டப்பெற்றிருக்கின்றது.

தலபுராணம் ஒன்றும் உள்ளது. அது இன்னும் வெளிவந்ததாகத்தெரியவில்லை.

இத்தலம் மாயூரமிருந்து திருவாரூர் செல்லும் இருப்புப்பாதையிலுள்ள பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே ஏழுகல் தொலைவிலுள் ளது. இறைவன்பெயர் வீழியழகர். இறைவிபெயர் சுந்தரகுசாம்பிகை. பிள்ளையார்பெயர் படிக்காசு பிள்ளையார்.

திருமால் சக்கரம்பெற்றது:- ஒருகாலத்தில் ததீசி முனிவருடன் போர்புரிந்தபோது தன் கையிலுள்ள சக்கராயுதத்தை விஷ்ணுமூர்த்தி பிரயோகிக்க அது கூர்மழுங்கித் திரும்பிவந்தது. அதனால் வேறு சக்கரம் பெறவேண்டித் தேவர்கள் சொல்லியதைக் கேட்டுச் சிவபெருமானிடமிருந்ததும் சலந்தரனைத் தடிந்ததுமான சக்சரத்தைப் பெறவேண்டி நாடோ றும் ஆயிரம் தாமரைமலர்களால் அர்ச்சித்துவரலா யினர். ஒருநாள் ஒரு பூக்குறையக்கண்டு, பூசையை எப்படியேனும் நிறைவாக்கக்கருதி, தாமரைமலர் போன்ற தன்கண்மலரில்ஒன்றைப்பறித்துச்சாத்தி வழிபட்டனர்.

சிவபெருமான் காட்சிகொடுத்துச் சக்கராயுதத்தையளித்தருளினர். விஷ்ணுமூர்த்தியும் கமலக்கண்ணன் என்று பெயர்பெற்ருர். இமயமலைச்சாரலில் தவஞ்செய்ததாக வேறுநூல்கள் கூறுமெனின் அது கற்பபேதமென்க.

சலந்தரனைத்தடிந்த வரலாறு:- சலந்தரன் என்பவன் மிகவும் வலிமைபெற்று யாவரையும் வருத்திவருங்காலத்தில், இந்திரன், தனக்குப்பயந்து கைலையையடைந்திருக்கின்றனன் என்பதறிந்து, அங்குச் செல்கின்றபோது அஃதறிந்த சிவபெருமான் வயோதிக வடிவத்துடன் முன்தோன்றி, அவன் செல்லும் காரணம் வினவி அறிந்து, தன் காற்பெருவிரலால் தரையில் சக்கரம் கிழித்து, "இதனை எடுக்கவல்லையோ?" என, அவன் அதனை எடுத்துத் தலையில் வைத்தமாத்திரத்தில் அச்சக்பரம் அவன் தலையை அறுத்து வீழ்த்தியது. இவ்வரலாறுகளை விளக்கும் திருவாசகப்பாசுரங்கள் இரண்டும் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

கழுமலக்காட்சி காட்டியது:- திருஞானசம்பந்தர் அடியார்களோடும், அப்பமூர்த்திகளோடும் இத்தலத்தில் தங்கியிருந்தகாலத்தில் சீகாழிப் பிராமணர்கள் வந்து வணங்கித் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டினர். அதற்குத் திருஞானசம்பந்தப்பெருமான் "நல்லது இன்று கழித்து நாளை இறைவர் அருள்பெற்றுப் போவது" என்றனர். அன்றிரவு

சிவபெருமான், பிள்ளையார் கனவில் தோன்றித் "தோணியில் இருந்தவண்ணம் இந்த விண்ணிழி விமானத்தில் காட்டுகிறோம்" எனக்கூறி மறைந்தருளினர். பிள்ளையார் அதிசயித்துத் திருக்கோயிலுக்குச்சென்று அவ்வண்ணமே திருத்தோணிபுரக் காட்சியைக்கண்டு, "மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற வாணுதல் மான்விழி மங்கையோடும் புகலி நிலாவிய புண்ணியனே மிழலை விண்ணிழி கோயில் விரும்பியது என்கொல் சொல்லாய்?" என்ற கருத்தமைந்த திருப்பதிகம்* பாடித் துதித்தார். சீகாழி அந்தணரைப்பார்த்து "பெருமான் விரவிய தானங்கள் எங்கும் சென்று விரும்பியகோலம் பணிந்து போற்றிவருவதை மேற்கொண்ட காதலைக்கண்டு அவ்வாறு காட்சியளித்தது" என்றுகூறி அந்தணர்களைச் செல்லுமாறு விடுத்தனர்.

படிக்காசு அருளியது:- மண்ணின்மிசை வான் பொய்த்தது; பசிவிரவியது; பாலறாவாயருடன் அரசும் அடியார்க்கும் கவலைவருமோ எனக் கருத்திற் கொண்டார்கள். மிழலைப்பெருமான் அவர்கள் கனவில் தோன்றிக் "கோயிலின் கிழக்குமேற்குப்பீடங்களில் நித்தம் ஓரோர்காசு அளிப்போம்" என்று அருள்புரிந்தருளினர். அவ்வாறே படிக்காசுபெற்று

* இப்பதிகம் இத்தலத்தில் பாடப்பெற்றிருப்பினும், தேவாரப் பதிகங்களைத் தொகுத்தவர்கள் இப்பதிகத்தினைச் சீகாழித் தலப்பதிகங்களோடு சேர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். ஆதலின் இந்நூலினிறுதியில் இப்பதிகம் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

அவ்விருவரும் நாதன் அடியார்களை அழைத்துத் திருவமுது செய்வித்திருந்தகாலத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் திருமடத்தில் திருவமுது காலத்திலாகாமைகண்டு பிள்ளையார் தமக்கு அளித்த காசு வாசிபடுங்காரணத்தை அறிந்து 'வாசிதீரவே காசு நல்குவீர்' எனப் பதிகம்பாடி நற்காசுபெற்றனர்.

சுந்தரமூர்த்திநாயனர் இவ்வரலாற்றினைத் தாம் பாடிய இத்தலப்பதிகத்தில்,

> "இருந்து நீர்தமி ழோடிசை கேட்கும் இச்சையாற்
> காசு நித்தம் நல்கினீர்"

என்று போற்றி அருளினர். நம்பியாண்டார்நம்பிகள் ஆளுடையபிள்ளையார் திருத்தொகையிலும்,

> "வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்"

என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்பர் அருளிய திருவாய்மூர்த் திருக்குறுந்தொகையிலும்,

> "பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
> வாடி வாட்டம் தவிர்ப்பார்"

என்று குறிக்கப்பெற்றுள்ளது.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத் திருநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்

பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம் மாதத்திலும் 11—1—50 அன்று திருவீழிமிழலை ஸ்ரீவீழியழகர்சுவாமி தேவஸ்தானத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்கள் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகிறது. அன்பர்கள் யாவரும் பாராயணஞ்செய்து ஸ்ரீவீழியழகர்சுவாமி திருவருளால் எல்லா நலனும் பெற்று உய்வார்களாக.

**வீழி மிழலை** வெண்காடு வேங்கூர்
வேதி குடி விசயமங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையாலங் காடு மரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர் தண்
காழி கடனாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

## 1. பண் – நட்டபாடை

இராகம் – நாட்டை] [தாளம் – ரூபகம்

திருச்சிற்றம்பலம்

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழலையே. 1

1. புனல்ஆர் சடையான், மழுஆர் படையான், பூதப்படை பல உடையான் என மாற்றுக. சரிகோவணம் - நழுவிய கோவணம்; எனை உடையான் - என்னை அடிமையாக உடையவன்; விடை - இடபம்; உடையான் இடம் வீழிம்மிழலை என்க. வீழிம்மிழலை சந்தம் நோக்கி விரித்தல் விகாரம்பெற்றது.

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழலையே. 2

2. ஈறு ஆய் - அந்தத்தைச் செய்பவனாய்; முதல் ஒன்று ஆய் - ஒருதனி முதல்வனாய்; இரு பெண் ஆண் (ஆய்) - சத்தியும் சிவமும் என்னும் இரண்டாய்; குணம் மூன்று ஆய் - சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணமாய்; மாறுமறை நான்கு ஆய் - மாறு படாத நான்கு வேதமாய்; பூதம் அவை ஐந்து ஆய் - பஞ்சபூதங்களாய்; ஆறு ஆர்சுவை (ஆய்)- உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, தித்திப்பு, கைப்பு, காழ்ப்பு என்று அறுசுவைஆய்; ஏழ் ஓசையொடு - ஏழ் இசையாய்; எட்டுத்திசை - அட்டதிக்கு; தானாய் வேறாய் உடன் ஆனான் - 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' என்பது சித்தி; எண்ணலங் காரம் காண்க,

வம்மின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்னுறைகோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழலையே. 3

3. வம்மின் - வாருங்கள்; அடியீர் விளி; நாள்மலர் - அன்றலர்ந்தமலர்; மும் என்பது ஒலிக்குறிப்பு; கெண்டி - கிண்டி.

பண்ணும்பத மேழும்பல வோசைத்தமிழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலிபலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர்மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழலையே. 4

4. பண் - பண்ணிசை; பதம் ஏழு - இசைக்குரிய சுரங்களைக் குறிக்கும் பதம் ஏழு; உறுதாளத்தொலி - பண்ணிற்கமைந்த தாளத் தொலி; மண், புனல், உயிர், காற்று, சுடர்மூன்று (சூரியன், சந்திரன், அக்கினி) விண் என்றது 'அட்டமூர்த்தமாய் விளங்கும் இறைவன் நிலையை விளக்கியவாறு.

ஆயாதன சமயம்பல வறியாதவனெறியின்
தாயானவ னுயிர்கட்குமுன் றலையானவன்மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை செல்வத்திருவாரூர்
மேயானவ னுறையும்மிடம் வீழிம்மிழலையே. 5

5. ஆயாதன - உண்மையை ஆராயாதன; நெறியின் தாயானவன் - நெறிகளைத் தோற்றுவித்தவன்; முத்தீ - ஆகவனீயம், தக்கிணாங்கினி, காருகபத்தியம்; இறை - தலைவன்.

கல்லானிழற் கீழாயிடர் காவாயெனவானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகிநாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழலையே. 6

6. மறைபூட்டி - வேதமாகிய (குதிரைகளைப்) பூட்டி; எரிவாய் - அக்கினியாகிய முனை; காற்று ஈர்க்கு - வாயுவாகிய இறகு; அரிகோல் - விட்டுணுவாகிய பாணம்; வாசுகிநாண் - வாசுகி என்னும் பாம்பாகிய கயிறு; கல்வில் - மேருவாகியவில்; இப்பாட்டில் முப்புரம் எரித்த வரலாறு கூறப்பட்டது.

கரத்தான்மலி சிரத்தான்கரி யுரித்தாயதொர்படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி பணிமூவர்கட்கோவா
வரத்தான்மிக வளித்தானிடம் வளர்புன்னைமுத்தரும்பி
விரைத்தாதுபொன் மணியீன்றணி வீழிம்மிழலையே. 7

7. சிரத்தான் மலி கரத்தான் - பிரமகபாலத்தால் மலிந்த கரத்தையுடையவன்; கரியுரி - யானைத்தோல்; படம் - போர்வை; புரத்தார் - முப்புரத்தசுரர்; பணிமூவர் - சுசீலன், சுதன்மன், சுபுத்தி என்பார்; தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுங்மாலி என்பாரும் ஆம்;

புன்னை முத்து அரும்பி - புன்னை முத்துப்போலும் வெண்மையான அரும்புகளைத் தோற்றுவித்து; விரைத்தாது பொன் மணி ஈன்று - வாசமுள்ள மகரந்தமாகிய பொன்னையும், (காயாகிய) மணியையும் ஈன்று,

முன்னிற்பவ ரில்லாமுர ணரக்கன்வடகயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி தடந்தோளிறவூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங்கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம் வீழிம்மிழலையே. 8

8. முன்நிற்பவர் இல்லா முரண் அரக்கன் - எதிர்த்து நிற்பவ ரில்லாத வலிமையுடைய இராவணன்; இறவூன்றி - முறியும்படி கால்விரலை ஊன்றி; பின்னைப்பணிந்து ஏத்த - பிறகு சாமகானம் பாட; பெருவாள் பேரொடும் கொடுத்த - பெரியவாளையும் இரா வணன் என்னும் பெயரையும் கொடுத்த; மின்னின் பொலி - மின்போல விளங்கும்.

பண்டேமுலகுண்டானவை கண்டானுமுன்னறியா
ஒண்டீயுரு வானானுறை கோயின்னிறைபொய்கை
வண்டாமரை மலர்மேன்மட அன்னம்நடைபயில
வெண்டாமரை செந்தாதுதிர் வீழிம்மிழலையே.* 9

9. உலகு உண்டான் - விட்டுணு; அவை கண்டான் - அவ்வுல கைப் படைத்தவனாகிய பிரமன்; தாமரை மலர்மேல் அன்னமாகிய பெண் நடை பயிலக்கண்டு வெண்தாமரையாகிய (வள்ளல்) செந்தாதாகிய பொன்னை உதிர்க்கும் என்னும் நயம் தோன்றுவது காண்க.

---

*இப்பாடலின் சித்திரத்தை அட்டைப்படத்தில் காண்க.

மசங்கற்சமண் மண்டைக்கையர் குண்டக்குணமிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிட மிருந்தேன்களித்திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைக ளொளிகொண்டெழு
[பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில் வீழிம்மிழலையே. 10

10. மசங்கல் - மயக்கம்; மண்டை - பிச்சைப்பாத்திரம்; மண்டைக்கையர் - கையையே பிச்சைப்பாத்திரமாக உடையவர் சமணர்; குண்டர் குணமிலிகள் - நற்குணமில்லாதவர்களாகிய குண்டர்கள்; இசங்கும் - இயங்கும்; கிளிகளும் மயில்களும், ஒளி கொண்டெழுகின்ற பகலோன் சஞ்சரிக்கும் விசும்பினைப் பொலி விக்கும் பொழிலையுடைய வீழிமிழலை என்க.

வீழிம்மிழ லைம்மேவிய விகிர்தன்றனைவிரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடைவாரே. 11

11. விகிர்தன் - சதுரப்பாடுடையவன்; தமிழ் - தமிழ்ப்பாடல்; வல்லார் - பாடவல்லவர்; ஊழின் மலிவினை - பண்டைப்பழவினை; உயர்வான் - வீட்டுலகம்.

திருச்சிற்றம்பலம்.

## 2. திருவிராகம்: பண் - நட்டபாடை

இராகம் - நாட்டை] [தாளம் - ஆதி

திருச்சிற்றம்பலம்

தடநில வியமலை நிறுவியொர்
 தழலுமிழ் தருபட வரவுகொ
டடலசு ரரொடம ரர்களலை
 கடல்கடை வுழியெழு மிகுசின
விடமடை தருமிட றுடையவன்
 விடைமிசை வருமவ னுறைபதி
திடமலி தருமறை முறையுணர்
 மறையவர் நிறைதிரு மிழலையே. 1

1. தடம்நிலவிய - விசாலமாகிய; மலை - மந்தரமலை; தழல் - நெருப்பு; படஅரவு - படத்தையுடைய வாசுகியாகிய பாம்பு; தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் கடைந்த வரலாறு கூறப்பட்டது; மிடறு - கண்டம்; உறைபதி மிழலை என முடிக்க.

தரையொடு திவிதல நலிதரு
 தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு
 திகிரியை யரிபெற வருளினன்
உரைமலி தருசுர நதிமதி
 பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடன்மண லணிதரு
 பெருதிடர் வளர்திரு மிழலையே, 2

2. தரை - பூவுலகம்; திவிதலம் - சுவர்க்கம்; நலிதரு-வருத்து கின்ற; திறல் - வலிமை; சலதரன் - சலந்தராசுரன்; வரையன - மலையொத்த; வருதிகிரி - அழித்துவருசக்கரம்; அரிபெற என்றது விட்டுணு வழிபட்டுச் சக்கரம்பெற்ற வரலாறு; சுரநதி - தேவ கங்கை; கடல்மணல் அணிதரு திடர்வளர் எனவருதலின் இத்தலம் கடற்கரையை அடுத்திருந்ததுபோலும்,

மலைமக டனையிகழ் வதுசெய்த
மதியறு சிறுமன வனதுயர்
தலையினொ டழலுரு வனகரம்
அறமுனி வுசெய்தவ னுறைபதி
கலைநில வியபுல வர்களிடர்
களைதரு கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதில்புடை தழுவிய
திகழ்பொழில் வளர்திரு மிழலையே. 3

3, மலைமகள் - பார்வதி; சிறுமனவன் - தக்கன்; அழல்உரு வன கரம் - அக்கினியின்கை; உருவன - அகரம் ஆறனுருபு; முனிவு செய்தவன் - கோபித்தவன்; இடர் - துன்பம்; சிலை - கல்.

மருவலர் புரமெரி யினின்மடி
தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினனல மலிதரு
கரனுர மிகுபிணை மமர்வன
இருளிடை யடையுற வொடுநட
விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி
மலிதர வளர்திரு மிழலையே. 4

4. மருவலர் - பகைவர்; கணை - பாணம்; கரன் - கையை யுடையவன்; உரம் - வலிமை; பிணம் அமர்வன இருளிடை யடை யுறவொடு நடவிசையுறுபரன் என்றது மகாசங்கார காலத்தில் இருளில் சுடலையில் நடனம் ஆடுவதை உட்கொண்டு; விழவுஒலி - திருவிழாவின்போது கேட்கும் மங்கல ஒலி.

அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடு மடியிணை யிருவர்கள்
பணிதர வறநெறி மறையொடு
மருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில
மலிபுன லணைதரு வயலணி
திணிபொ ழிறருமண மதுநுகர்
அறுபத முரல்திரு மிழலையே. 5

5. வடமரம் - ஆலவிருட்சம்; அமர்வு - விருப்பம்; ஒளி...மிழலை - ஒளியுள்ள நீலமணிபோலவும் ஒப்பற்ற மரகதம் போலவும் பசுமை நிறைந்த நிலத்தில் நீரினால் நிறைந்த வயல்கள் அழகைச் செய்யும் நெருங்கிய பொழில்கள்தரும் மணமிக்க தேனை நுகரும் வண்டுகள் ஒலிக்கும் திருவீழிமிழலை.

வசையறு வலிவன சரவுரு
வதுகொடு நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகளறி
வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து
அசைவில படையருள் புரிதரு
மவனுறை பதியது மிகுதரு
திசையினின் மலர்குல வியசெறி
பொழின்மலி தருதிரு மிழலையே. 6

6. வசையறு - பழிப்பில்லாத; வன்சரஉரு - வேடவடிவம்; இப்பாசுரத்தில் அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அருளிய வரலாறு குறிக்கப்பட்டது காண்க. தரு - மரங்கள்.

நலமலி தருமறை மொழியொடு
நதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன்
மறையவ னுயிரது கொளவரு
சலமலி தருமற லிதனுயிர்
கெடவுதை செய்தவ ரனுறைபதி
திலகமி தெனவுல குகள்புகழ்
தருபொழில் அணிதிரு மிழலையே. 7

7. மறைமொழி - வேதமந்திரம்; புகை-தூபம்; மறையவன் - மார்க்கண்டேயமுனிவர்; சலம் மலி - கோபம்மிகுந்த; மறலி - இயமன்; இப்பாசுரத்துள் மார்க்கண்டேயருக்கு அருளிய வரலாறு குறிக்கப்பட்டது. இது திலகம் - இதுவே நெற்றித்திலகம்போலச் சிறந்தது.

அரனுறை தருகயி லையைநிலை
குலைவது செய்த தசமுகனது
கரமிரு பதுநெரி தரவிரல்
நிறுவிய கழலடியு டையவன்
வரன்முறை யுலகவை தருமலர்
வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு
சிவனுறை பதிதிரு மிழலையே. 8

8. அரன் - சிவபெருமான்; தசமுகன்-இராவணன்; உலகவை தரு மலர்வளர் மறையவன் என்றது பிரமனை; பிரமன் சிரம் கொய்யப்பெற்றதும் பிரமகபாலத்தில் பலியேற்றதுமாகிய வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.

அயனொடு மெழிலமர் மலர்மகண்
மகிழ்கண னளவிட லொழியவொர்
பயமுறு வகைதழ னிகழ்வதோர்
படியுரு வதுவர வரன்முறை
சயசய வெனமிகு துதிசெய
வொளியுரு வியவவ னுறைபதி
செயநில வியமதில் மதியது
தவழ்தர வுயர்திரு மிழலையே. 9

9. அயன் - பிரமன்; எழில் அமர் மலர்மகள் மகிழ் கணன் என்றது திருமாலை; தழல் - நெருப்பு; செயம் - வெற்றி.

இகழுரு வொடுபறி தலைகொடு
மிழிதொழின் மலிசமண் விரகினர்
திகழ்துவ ருடையுடல் பொதிபவர்
கெடவடி யவர்மிக வருளிய
புகழுடை யிறையுறை பதிபுன
லணிகடல் புடைதழு வியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர்
செறிவொடு திகழ்திரு மிழலையே. 10

10. பறிதலை - மயிர்பறித்த தலை; பொதிபவர் - மூடுபவர்; சுரர்தரு - கற்பகவிருட்சம்; கொடையினர் - வள்ளல்கள்.

சினமலி கரியுரி செய்தசிவ
னுறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை
தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழின்
மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மக ளிசைதர
விருநில னிடையினி தமர்வரே. 11

**11.** கரி யுரிசெய்த - யானையைஉரித்த; சிரபுரம் என்பது சீகாழிக்குரிய திருநாமங்களுள் ஒன்று. மலர்மகள் - தனலக்குமி, கலைமகள் - சரசுவதி; சயமகள் - வீரலக்குமி.

திருச்சிற்றம்பலம்.

3. பண் - தக்கராகம்

இராகம் - காம்போதி] [தாளம் - திருபுடை

திருச்சிற்றம்பலம்

அரையார் விரிகோ வணவாடை
நரையார் விடையூர்தி நயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையா லுணர்வா ருயர்வாரே. 1

**1.** அரை - இடுப்பு; நரை ஆர்விடை - வெண்மையான இடபம்; ஊர்தி - வாகனம்; விரை - வாசம்;

புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங்கை கரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமுநெஞ்சே. 2

2. புன்சடை - சிவந்த சடை; கனைதல் - ஆரவாரித்தல்; கரந்தான் - ஒளித்தவன்; நினைவில்லவர் நெஞ்சமும் நெஞ்சே - நினையாதவருடைய மனமும் மனமாகுமா? ஆகாது என்பதாம்.

அழவல் லவரா டியும்பாடி
எழவல் லவரெந் தையடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர்தொண்டே. 3

3. நல்லவர் செய்யும் தொண்டின் இயல்பு கூறியவாறு.

உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் அரையார்த் தவழகன்
விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் மடியா ரடியாரே. 4

4. அரவம் - பாம்பு; திருவீழிமிழலையைப் பரவும் அடியாரே அடியார் என்க.

கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவா ருயர்வாரே. 5

5. வரிது - வரிகளையுடையது; அறை - சத்திக்கின்ற; தார் - பூங்கொத்து.

சடையார் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்
விடையா னுறைவீ ழிம்மிழலை
அடைவா ரடியா ரவர்தாமே. 6

6. கொடிமேலது ஓர் பைங்கண் விடையான் - பசிய கண்ணையுடைய இடபக்கொடியுடையான்.

செறியார் கழலுஞ் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றான்
வெறியார் பொழில்வீ ழிம்மிழலை
அறிவா ரவலம் மறியாரே. 7

7. சிலம்பும் ஆர்க்க என உம்மைவிரிக்க; வெறி - மணம்; அவலம் - துன்பம்;

உளையா வலியொல்க வரக்கன்
வளையா விரலூன் றியமைந்தன்
விளையார் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவா ரடியாரே. 8

8. உளையா - அழியாத; ஒல்க - தளர; வளையா - வளைத்து; மைந்தன் - வலிமையுடையான்; விளை - விளைவு.

மருள்செய் திருவர் மயலாக
அருள்செய் தவனா ரழலாகி
வெருள்செய் தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே. 9

9. மருள் - மயக்கம்; இருவர் - பிரமவிட்டுணுக்கள்; வெருள் செய்தவன் - அஞ்சச்செய்தவன்; தெருள்செய்தவர் - தெளிந்தவர்.

துளங்குந் நெறியா ரவர்தொன்மை
வளங்கொள் ளன்மின்புல் லமண்டேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினையோய்வே. 10

10. துளங்கும் - ஓர்நிலையாகநில்லாது அசையும்; தொன்மை வளம் - பழமையாகிய வளம்; அமணர் தேரர் கொள்கைகளும் தொன்மையனவே என்பது கருதத்தக்கது.

நளிர்கா ழியுண்ஞான சம்பந்தன்
குளிரார் சடையா னடிகூற
மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. 11

11. நளிர் - குளிர்ச்சி; கேடுஇலை என்க,

திருச்சிற்றம்பலம்.

## 4. பண் - குறிஞ்சி

இராகம் - ஹரிகாம்போதி] [தாளம் - திருபுடை

திருச்சிற்றம்பலம்

இரும்பொன் மலைவில்லா வெரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்றா னுறைகோயில்
தெரிந்த வடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே. 1

1. இரும் பொன்மலை வில்லா - பெரிய மேருமலை வில்லாக; எரி அம்பா - அக்கினி அம்பாக; நாணின் செற்றான் - நாணில் தொடுத்து அழித்தான்; திரிபுரம் - ஆங்காங்கும் சென்று உலாவும் முப்புரம்; "எழுந்துலகை நலிந்துழலும் அவுணர்கள்தம் புரமூன்றும்" என்றார் பின்னும் (பதிகம் 7, பாடல் 3).

வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடனஞ்சை யுண்டா னுறைகோயில்
கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மிழலையே, 2

2. வாதைப்படுகின்ற - துன்பப்படுகின்ற; வானோர்-தேவர்; ஓதக்கடல் - வெள்ளமாகிய நீரையுடைய கடல்; நஞ்சு - விடம்; கிடை - வேதமோதும் சிறுவர்கூட்டம், ஓவா - ஒழியாத,

பயிலும் மறையாளன் றலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடுஞ் சோதி யுறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் மிளவேயும்
வெயிலும் பொலிமாதர் வீழி மிழலையே. 3

3. பயிலும் மறையாளன் - வேதத்தை ஓதிப்பழகும் பிரமன்; துயிலும் பொழுது - மகாசங்காரகாலமாகிய இரவில்; மயிலும்...... மாதர் - மயில்போலும் சாயலினையும், மான்பார்வைபோலும் பார்வையினையும், மதிபோலும் முகத்தினையும், இளைய மூங்கில்போலும் தோளினையும், வெயில்போலும் மேனியையுமுடைய பெண்கள்.

இரவன் பகலோனு மெச்சத் திமையோரை
யிரவிட் டருள்செய்த நிமலன் னுறைகோயில்
குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை
விரவும் பொழிலந்தண் வீழி மிழலையே. 4

4, இரவன் - சந்திரன்; பகலோன் - சூரியன்; எச்சம் - யாகம்; இமையோர் - தேவர்; நிரவிட்டு அருள்செய்த - ஒருசேர வதைத்துப் பின் அருள்செய்த; தக்கயாகத்திலீடுபட்ட குற்றம் தீர்த்து அருள்செய்த எனினுமாம். நிமலன் - குற்றமற்றவன்;

கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமா னுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. 5

5. கண்ணிற் கனலால் - நெற்றிக்கண் நெருப்பினால்; பெண் என்றது இரதியை; புயல்காட்டும் - மேகம்போலத்தோன்றும்;

மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடவாழி
ஏலா வலயத்தோ டீந்தா னுறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. 6

6. மால் - விட்டுணு; ஆயிரங்கொண்டு மலர்க்கண் இட - ஆயிரம்பூவில் ஓர் பூக்குறைய நிறைக்கவேண்டித் தமது மலர்போலுங் கண்ணை இடந்து சாத்தி வழிபடலும்; ஆழியாகிய ஏலா வலயம் என்க. சேலாகியபொய்கை - சேல்மீன்கள் நிறைந்த பொய்கை; கமலங்கள் எரிகாட்டும் - தாமரைமலர்கள் எரிபோல் காணப்படும்.

மதியால் வழிபட்டான் வாணாள் கொடுபோவான்
கொதியா வருகூற்றைக் குமைத்தா னுறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியா னிற்கின்றார் வீழி மிழலையே. 7

7. மதியால் வழிபட்டவன் மார்க்கண்டேயன்; கொதியா - கொதித்து; குமைத்தான் - துவைத்தான்; நெதி - நிதி; விதியால் நிற்கின்றார் - விதிப்படி ஒழுகுகின்றவர்கள்.

எடுத்தான் றருக்கினை யிழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டா னுறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே. 8

8. எடுத்தான் - கைலையை எடுத்த இராவணன்; தருக்கு - செருக்கு; விரல் ஊன்றி இழித்தான் - கால்பெருவிரலை ஊன்றி அழித்தவன்; வாள்கொடுத்தான் - வாளாயுதம் கொடுத்தான்; ஆளா - அடிமையாக; மறைபடித்தவரும், வேள்விபயின்றவரும், பாவத்தை விடுத்தவரும் மிகவாழும் திருவீழிமிழலை என்க.

கிடந்தா னிருந்தானுங் கீழ்மேல் காணாது
தொடர்ந்தாங் கவரேத்தச் சுடரா யவன்கோயில்
படந்தாங் கரவல்குற் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங் கியகண்ணார் வீழி மிழலையே. 9

9. கிடந்தான் - நீர்மேற் கிடந்த திருமாலும்; இருந்தான் - பூவிலிருந்த பிரமனும்; கீழ் மேல் காணாது - அடியும் முடியும் காணாது; படந்தாங்கு............கண்ணார் - பாம்பின் படத்தைஒத்த அல்குலையும், பவளம்போலும் சிவந்தவாயின்மேல் விடம் போலும் கரிய விழியையுமுடைய பெண்கள்.

சிக்கார் துவராடைச் சிறுதட் டுடையாரும்
நக்காங் கலர்தூற்றும் நம்பா னுறைகோயில்
தக்கார் மறைவேள்வித் தலையா யுலகுக்கு
மிக்கா ரவர்வாழும் வீழி மிழலையே. 10

**10.** சிக்கு ஆர் துவர் ஆடை - சிக்குப்பொருந்திய காவி ஆடை; சிறுதட்டு - சிறிய ஆசனத்தடுக்கு. அலர் தூற்றும் - பழிகூறும்;

மேனின் றிழிகோயில் வீழி மிழலையுள்
ஏனத் தெயிற்றானை யெழிலார் பொழிற்காழி
ஞானத் துயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே. 11

**11.** மேல்நின்று இழிகோயில் - விண்ணிலிருந்து இறங்கிய விமானம் பொருந்தியகோயில்; ஏனத்தெயிறு - பன்றிப்பல்; எழில் - அழகு; வாய்மைத்து - சத்தியமாயுள்ளது.

திருச்சிற்றம்பலம்

### 5 திருவிருக்குக்குறள்: பண் — குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே. 1

**1.** வாசி - நாணயவட்டம்; மாசு - குற்றம்; ஏசல் - இகழ்தல்.

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

**2.** கறை - குற்றம். யாவர்க்கும் தலைவராய நீர் ஒருவர்க்கு வாசியுடனும், மற்றொருவர்க்கு வாசி இல்லாமலும் காசுகொடுத்தல் தருமா என்ற குறிப்புத்தோன்ற இறைவராயினீர் என்றார்.

செய்ய மேனியீர், மெய்கொண் மிழலையீர்
பைகொ ளரவினீர், உய்ய நல்குமே. 3

3. பை - படம்.

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறு மருளுமே. 4

4. ஏறு - இடபம்;

காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேம நல்குமே. 5

5. தூமம் - புகை; ஈண்டு நெருப்பை உணர்த்திற்று. கோப முடையார்க்குக் கண் சிவத்தலும் புகைதோன்றலும் இயல்பு என்பது கருதத்தக்கது; நாமம் - புகழ்; சேமம் - நல்வாழ்வு.

பிணிகொள் சடையினீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண் டருளுமே. 6

6. பிணிகொள்சடை - ஒன்றோடொன்று பின்னியசடை; மணிகொள் மிடறு - நீலமணிபோலும் கண்டம்; பணிகொடு - தொண்டினை ஏற்றுக்கொண்டு.

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

7. பங்கினீர் - பாகமாக உடையீர்; துங்கம் - பரிசுத்தம்; சங்கை - சந்தேகம்.

அரக்க னெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

8. அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர் - கொடிய இராவணனது தோளை நெரித்துப் பின் அவன் வேண்ட இரங்கினீர்; ஆதலால் எனக்கும் இரங்குவீராக என்பது குறிப்பு. கரக்கை-கரத்தல் அதாவது மறைத்தல்; படிக்காசில் மாற்றைக் குறைத்தல்.

அயனு மாலுமாய், முயலு முடியினீர்
இயலு மிழலையீர், பயனு மருளுமே. 9

9. பயனும் அருளும் - வாசிதீரச் செய்வதோடு நற்பயனையும் அருளும்.

பறிகொள் தலையினர், அறிவ தறிகிலார்
வெறிகொண் மிழலையீர், பிறிவ தரியதே. 10

10. பறிகொள் தலையினர் - மயிர்பறித்த தலையையுடையவர்; வெறி - மணம்; பிறிவது - பிரிவது - எதுகை நோக்கி நின்றது.

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. 11

11. வாழி - வாழ்வதாக; தாழும் மொழிகள் - வணங்கிச் சொன்ன பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்.

## 6. திருவிராகம்: பண் - வியாழக்குறிஞ்சி

இராகம் - சௌராட்டிரம்] [தாளம் - ஆதி

திருச்சிற்றம்பலம்

அலர்மகள் மலிதர வவனியி னிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்
நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே. 1

1. மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய உமாதேவியை இடப் பாகத்துக்கொண்டு மகிழ்பவரும், நன்மை மிகுந்த வடிவுடையவரு மாகிய இறைவனது நகரமாகிய, மிக்க புகழ் நிலத்தின் மலிந்த மிழலையை நினையவல்லவர் இலக்குமி மலிய பூமியில் நிகழ்பவர் ஆவர். மிழலையை நினையவல்லவர் நிகழ்பவர் என்க. பாசுரந் தோறும் இவ்வாறே நினையவல்லவர் - உருவினர் - வருபவர் - உடையவர் என முடிக்க.

இருநில மிதன்மிசை யெழில்பெறு முருவினர்
கருமலி தருமிகு புவிமுத லுலகினில்
இருளறு மதியின ரிமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவ லவரே. 2

2. எழில் - அழகு; கரு - பிறப்பு; புவிமுதல் உலகினில் - பூலோகம் முதலிய உலகங்களில். நிருபமன்-ஒப்பில்லாதவன்.

கலைமகள் தலைமக னிவனென வருபவர்
அலைமலி தருபுன லரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவ லவரே. 3

3. கலைமகள் தலைமகள் - சரசுவதி நாயகனாகிய பிரமன்; அரவு - பாம்பு, நகுதலை - பிரமகபாலம்; இதழி - கொன்றை;

மாடமர் சனமகிழ் தருமன முடையவர்
காடமர் கழுதுக ளவைமுழ வொடுமிசை
பாடலி னவில்பவர் மிகுதரு முலகினில்
நீடமர் மிழலையை நினையவ லவரே. 4

4. மாடு - பக்கம்; பொன் எனினுமாம்; காடு அமர் கழுதுகள் - காட்டில்வாழும் பேய்கள்; முழவொடும் - மத்தள ஓசையோடும்.

புகழ்மகள் துணையினர் புரிகுழ லுமைதனை
இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே. 5

5. உமைதனை இகழ்வு செய்தவன் - தக்கன்; மறைவழிவளர் முகம்மது - வேதவிதிப்படி வளர்த்த முகத்தை (தலையை).

அன்றின ரரியென வருபவ ரரிதினில்
ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி
சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற
நின்றவன் மிழலையை நினையவ லவரே. 6

6. அன்றினர் - பகைவர்; அரியென - சிங்கம்போல; சிறுமுறுவல்கொடு ஒளிபெறநின்றவன் - சிரித்துப் புரமெரித்தவர்;

கரம்பயில் கொடையினர் கடிமல ரயனதொர்
சிரம்பயில் வறவெறி சிவனுறை செழுநகர்
வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவ லவரே. 7

7. கரம்பயில் கொடையினர் - கொடைத்தொழில் பயின்ற கையையுடையார்; கடிமலர் - வாசமுள்ள தாமரைமலர்; பயில்வு - பயிலுதல்; மறைமுறை அறநெறி நிரம்பினர் - மறைவழியே தரும மார்க்கத்தை மிகவும் அநுட்டித்தவர்.

ஒருக்கிய வுணர்வினொ டொளிநெறி செலுமவர்
அரக்கனன் மணிமுடி யொருபது மிருபது
கரக்கன நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவ லவரே. 8

8. ஒருக்கிய உணர்வு - புலன்களைவென்ற அறிவுடன்; ஒளிநெறி - வீட்டுநெறி; அரக்கன் - இராவணன்; கரக் கனம் - கரங்களின்மிகுதி; நெரிதர - நெரிய.

அடியவர் குழுமிட வவனியி னிகழ்பவர்
கடிமல ரயனரி கருதரு வகைதழல்
வடிவுரு வியல்பினொ டுலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினையவ லவரே. 9

9. குழுமிட - கூட; கடிமலர் - வாசமுள்ள தாமரைமலர்; அரி - விட்டுணு; தழல்வடிவு - அக்கினிவடிவு.

மன்மத னெனவொளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களு மதியிலர்
துன்மதி யமணர்கள் தொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவ லவரே. 10

10. மருது அமர்வன்மலர் - மருதினது வலியமலர்; துன்மதி- கெட்டபுத்தி; நின்மலர் - மலமற்றவர்.

நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவருல கினிலடி யவரே. 11

11. நித்திலன் - முத்துப்போன்றவன்: நொச்சிசூடிய இறைவன் என்றலுமாம். நிகரிலி -ஒப்பில்லாதவன்; நிகரிலியாகிய தமிழ் விரகன் என்க. சீகாழிக்குரிய பெயர்களுள் புகலி என்பதும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

### 7. பண் - மேகராகக்குறிஞ்சி

இராகம் - நீலாம்புரி] [தாளம் - திருபுடை

திருச்சிற்றம்பலம்

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோ னின்றகோயில்

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே. 1

1. ஏர் - அழகு; வடவால் - கல்லாலவிருட்சம்; ஈரிருவர் - சனகர், சனற்குமாரர், சநாதனர், சனந்தனர்; நேரிய நான்மறை - நேர்மையான நால்வேதம்; ஒளிசேர்நெறி - வீட்டுநெறி; பண்டிதர்கள் - வேதபண்டிதர்கள்; வேரி - தேன்; கோயில் மிழலையாமே எனப் பாசுரந்தோறும் முடிக்க.

பொறியரவ் மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கு மிழலையாமே. 2

2. பொறி - புள்ளி; அரவம் - பாம்பு; பொருப்பு - மலை; புத்தேளிர் - தேவர்; மறி - அலைமறியும்; செறி .........வீற்றிருக்கும் - நெருங்கிய இதழையுடைய தாமரையில் செந்நெற்கதிராகிய சாமரையிரட்ட அன்னம் அரசு வீற்றிருக்கும். உருவகம் காண்க.

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள்தம்
புரமூன்று மெழிற்கணுடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோ னுறையுங்கோயில்

கொழுந்தரள நகைகாட்டக் கோகநதம்
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டு மிழலையாமே. 3

3. நலிந்து உழலும் - வருத்தித்திரிகின்ற; கண்ணாடி-கண்ணால் கண்டு; தரளம் நகைகாட்ட - முத்துக்கள் பெண்கள் பற்களைக் காட்டவும்; கோகநதம் முகம்காட்ட - தாமரை பெண்கள் முகத்தைக் காட்டவும்; கயல் விழிகாட்ட - கயல் மீன் விழியைக்காட்டவும்; வில்பவளம் வாய்காட்டும் - ஒளியுள்ளபவளம் வாயைக்காட்டுகின்ற.

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே. 4

4. நூறாயிரம் - இலக்ஷம்; யோனிபேதம் - பிறவிபேதம்; வரை - மலை; முழவு அதிர - மத்தள ஓசைபோல் அதிர; இதழி - கொன்றை; காந்தள் மலரைக் கைக்கு உவமைகூறுவர்; முகில் மத்தளங்கொட்ட, மயில்கள்ஆட, வண்டுபாட, கொன்றை பொன் தர, காந்தள் கை ஏற்பதாகக்கூறியது காண்க.

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்

தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே. 5

5. குணங்கள் மூன்றுஆய் - சாத்துவிகம், ராசதம், தாமதம் ஆகிய முக்குணங்களாய்; மூன்றுஉருவாகி - அம் முக்குணங்களும் பொருந்திய பிரம விட்டுணு உருத்திரர்களாகி; தாணு - சிவலிங்கம்; வேணு - மூங்கில்; மூங்கிலில் கட்டப்பட்ட கொடி மேலே உயர்ந்து விண்ணோரை அழைப்பதுபோல அசைகின்றன என்றது தற்குறிப்பேற்றம்.

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே. 6

6. அகன் அமர்ந்த - மனத்தில் விரும்பிய; அறுபகை - காமக் குரோத லோபமோக மதமாற்சரியம்; ஐம்புலன் - சத்தபரிசரூபரச கந்தம்; உள்ளப்புண்டரிகம் - இதயதாமரை; மணிதலம் - நீலமணி போலும் பசியதரையின்கண்; சங்குளவர்க்கம் திகழ - சங்கினங்கள் விளங்க; சலசத்தீயுள் - தாமரைப்பூவாகிய தீயுள்; பொரியட்ட - பொரிதூவ; விவாகத்தின்போது சங்குமிகஒலித்தலும் தீயில் பொரியிடுதலும் மரபு.

ஆறூடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறூடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறூடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறூய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே. 7

7. ஆறுஆடு சடைமுடியன் - கங்கைநதி விளையாடும் சடைமுடியுடையான்; அனல்ஆடு மலர்க்கையன் - அக்கினி தங்கிய மலர்போலும் கையன்; இமயப்பாவை - உமாதேவியார்; சேறூடு......... பாடும் - சேற்றிற்பொருந்திய செங்கழுநீர்மலரில் உள்ள தாதுக்களில் படிந்து தேனை உண்டு முன்னைய கரியஉருவம்மாறி சிவந்த வண்டு நல்ல செவ்வழிப்பண் பாடும்.

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தான்ற னுடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே. 8

8. கருப்பம் - கறுப்பு; எதுகை நோக்கிக் கருப்பு எனநின்றது போலும்; பொருப்பு - மலை; முடிதோள் - முடியுந்தோளும்; புனிதர் - பரிசுத்தமானவர்; தருப்பம் - தறுக்கு.

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினான் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே. 9

9. மலரோன் - பிரமன்; மலரோனும் மாலும் ஏனமோடன்ன மாகி - மலரோன் அன்னமும் மால் ஏனமுமாகிஎன்க; இது எதிர் நிரல் நிறை. அந்தம் அடி - முடியும் அடியும்; மறை வழியே - வேத மந்திரங்களைச்சொல்லி அவ்வழியே; புல் - தருப்பைப்புல்; சமிதை - சமித்து; வேட்டு - யாகஞ்செய்து.

எண்ணிறந்த வமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியு நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்மிழியு மிழலையாமே. 10

10. அமணர் - சமணர்; சாக்கியர் - பவுத்தர்; ஓசைகேட்டு - இனிய ஓசையைக் கேட்டு; விண்ணவர்கள் - இசையில் வல்ல தேவர்கள்.

மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா ரிருநிலத்தில்
ஈசனெனு மியல்பினோரே. 11

11. சிரபுரம் என்பது சீகாழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்று.

திருச்சிற்றம்பலம்.

## 8. பண் – காந்தாரபஞ்சமம்

இராகம் – கேதாரகௌளம்] [தாளம் – திருபுடை

திருச்சிற்றம்பலம்

கேள்வியர் நாடொறு மோதுநல் வேதத்தர் கேடிலா
வேள்விசெ யந்தணர் வேதியர் வீழிமி ழலையார்
வாழியர் தோற்றமுங் கேடும்வைப் பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட் கணியரே. 1

1. ஓதுநல்வேதத்தர் - நல்வேதமோதுபவர்; வேதியர் வீழிமிழலையார் - வேதியர்வாழும் திருவீழிமிழலையில் வீற்றிருப்பவர்; தோற்றமும் கேடும் - படைப்பும் சங்காரமும்; ஆழியர் - ஆக்ஞாசக்கரமுடையவர்; அணியர் - மிகவும் சமீபத்திலுள்ளவர்.

கல்லினற் பாவையொர் பாகத்தர் காதலித் தேத்திய
மெல்லினத் தார்பக்கன் மேவினர் வீழிமி ழலையார்
நல்லினத் தார்செய்த வேள்விசெ குத்தெழு ஞாயிற்றின்
பல்லனைத் துந்தகர்த் தாரடி யார்பாவ நாசரே. 2

2. கல்லின் நற்பாவை - பார்வதி; வேள்வி செகுத்து - யாகத்தை அழித்து; ஞாயிற்றின்பல் அனைத்தும் தகர்த்தார் - சூரியன் பற்களை எல்லாம் உடைத்தவர்; பாவநாசர் - அடியவரது பாவங்களை நாசஞ்செய்பவர்.

நஞ்சினை யுண்டிருள் கண்டர்பண் டந்தக னைச்செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழிமி ழலையார்
அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே. 3

3. அந்தகனை - இயமனை; அஞ்சனம் - மை; மஞ்சனச்செஞ் செஞ்சடை - நீரால் நனைந்த சிவந்தசடை.

கலையிலங் கும்மழு கட்டங்கங் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழிமி ழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலந்த மருகம்
அலையிலங் கும்புன லேற்றவர்க் கும்மடி யார்க்குமே. 4

4. மழு -மழுப்படை; கட்டங்கம் - யோக தண்டு; தமருகம் - உடுக்கை.

பிறையுறு செஞ்சடை யார்விடை யார்பிச்சை நச்சியே
வெறியுறு நாட்பலி தேர்ந்துழல் வீழிமி ழலையார்
முறைமுறை யாலிசை பாடுவா ராடிமுன் றொண்டர்கள்
இறையுறை வாஞ்சிய மல்லதெப் போதுமென் னுள்ளமே. 5

5. நச்சி - விரும்பி; வாஞ்சியம் ஒருசிவஸ்தலம்.

வசையறு மாதவங் கண்டு வரிசிலை வேடனாய்
விசையனுக் கன்றருள் செய்தவர் வீழிமி ழலையார்
இசைவர விட்டியல் கேட்பித்துக் கல்ல வடமிட்டுத்
திசைதொழு தாடியும் பாடுவார் சிந்தையுட் சேர்வரே. 6

6. வசை - பழிப்பு; விசையன் - அருச்சுனன்; கல்லவடம் - ஒருவகைப்பறை.

சேடர்விண் ணோர்கட்குத் தேவர்நன் மூவிருதொன்னூலர்
வீடர்முத் தீயர்நால் வேதத்தர் வீழிமி ழலையார்
காடரங் காவுமை காணவண் டத்திமை யோர்தொழ
நாடக மாடியை யேத்தவல் லார்வினை நாசமே. 7

7 சேடர் - பெருமையுடையவர்; மூவிருதொல்நூலர் - அறுவகைச்சமயத்தவருக்கும் வகுத்த பழைமையாகிய நூலையுடையார்; காடு - சுடலை; அரங்கு - நாடகமேடை; நாடகம்ஆடி - நடித்தவன்.

எடுத்தவன் மாமலைக் கீழவி ராவணன் வீழ்தர
விடுத்தருள் செய்திசை கேட்டவர் வீழிமி ழலையார்
படுத்துவெங் காலனைப் பால்வழி பாடுசெய் பாலற்குக்
கொடுத்தன ரின்பங்கொ டுப்பர்தொழக்குறை வில்லையே. 8

8. வெம் காலனை - கொடிய இயமனை; பால் வழிபாடு செய் பாலன் - முறையே வழிபாட்டினைச் செய்த மார்க்கண்டேயன்.

திக்கமர் நான்முகன் மாலண்ட மண்டலந் தேடிட
மிக்கமர் தீத்திர ளாயவர் வீழிமி ழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடஞ் சூழ்தரும்
நக்கர்தந் நாமந மச்சிவா யவ்வென்பார் நல்லரே. 9

9. திக்கு அமர் நான்முகன் - நான்கு திக்கும் அமர்ந்த நான்கு முகங்களையுடைய பிரமன்; தீத்திரள் - அக்கினித்திரட்சி; சொக்கம் - ஒருவகைக்கூத்து; பாரிடம் - பூதம்; இறுதியடி "நக்கன் நாமம் நமச்சிவாயவே" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தின் பகுதியை நினைப்பிக்கின்றது.

துற்றரை யார்துவ ராடையர் துப்புர வொன்றிலா
வெற்றரை யாரறி யாநெறி வீழிமி ழலையார்
சொற்றெரி யாப்பொருள் சோதிக்கப் பாநின்ற சோதிதான்
மற்றறி யாவடி யார்கடஞ் சிந்தையுண் மன்னுமே. 10

10. துப்புரவு - பரிசுத்தம்; சொல் தெரியாப் பொருள் - சொல்லினால் அறியப்படாத பொருள்; சோதிக்கு அப்பால் நின்ற சோதி - காணப்படும் சோதிகளுக்கு அப்பாற்பட்ட சோதிவடிவினன்.

வேதியர் கைதொழு வீழிமி ழலைவி ரும்பிய
ஆதியை வாழ்பொழிற் காழியுண் ஞானசம் பந்தனுய்ந்
தோதிய வொண்டமிழ் பத்திவை யுற்றுரை செய்பவர்
மாதியல் பங்கன் மலரடி சேரவும் வல்லரே. 11

11. வேதியர் - அந்தணர்; ஆதி - முதற்கடவுள்; மாது இயல் பங்கன் - உமாதேவி பொருந்திய பாகத்தை யுடையவன்.

திருச்சிற்றம்பலம்.

## 9. திருவிராகம்: பண் – சாதாரி

இராகம் – பந்துவராளி] [தாளம் – ஜம்பை

திருச்சிற்றம்பலம்

சீர்மருவு தேசினொடு தேசமலி
செல்வமறை யோர்கள்பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி
னனமர் சயங்கொள்பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல்
சூழ்பழன நீடவருகே
கார்மருவு வெண்கனக மாளிகை
கவின்பெருகு வீழிநகரே. 1

1. சீர்மருவு தேசினொடு - சிறப்புப் பொருந்திய ஒளியுடன்; தார் மருவு கொன்றை - மாலையாகப் பொருந்திய கொன்றை; பங்கயம் - தாமரை; கார்மருவு - மேகங்கள் பொருந்திய; வெண் கனகம் - வெள்ளி; கவின் - அழகு.

பட்டமுழ விட்டபணி லத்தினொடு
பன்மறைக ளோதுபணிநல்
சிட்டர்கள்ச யத்துதிகள் செய்யவருள்
செய்தழல்கொண் மேனியவனூர்
மட்டுலவு செங்கமல வேலிவயல்
செந்நெல்வளர் மன்னுபொழில்வாய்
விட்டுலவு தென்றல்விரை நாறுபதி
வேதியர்கள் வீழிநகரே. 2

2. பட்டம் உழவிட்ட பணிலம் - வரியாக உழவிட்ட சங்கு: சங்கு ஊர்ந்துசெல்லும்போது உழுததுபோல வரி காணப்படும்; இப்பொருளில் பாட்டம் பட்டமெனக் குறுக்கல்விகாரம் பெற்றது போலும்: சிட்டர்கள் - அடியார்கள்; தழல்கொள்மேனியவன் - அக்கினிவடிவினன்; மட்டு - தேன்; கமலவேலி - தாமரை வேலி; இது தாமரையின் மிகுதிகுறித்தது. விரை - வாசம்; நாறுதல் - தோன்றுதல்.

மண்ணிழிசு ரர்க்குவள மிக்கபதி
மற்றுமுள மன்னுயிர்களுக்
கெண்ணிழிவி லின்பநிகழ் வெய்தவெழி
லார்பொழி லிலங்கறுபதம்
பண்ணிழிவி லாதவகை பாடமட
மஞ்ஞைநட மாடவழகார்
விண்ணிழிவி மானமுடை விண்ணவர்பி
ரான்மருவு வீழிநகரே. 3

3. சுரர்க்கு - தேவர்களுக்கு; எழில் - அழகு; இலங்க - விளங்க; அறுபதம் - வண்டு; மஞ்ஞை - மயில்.

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு
நற்கலைதெ ரிந்தவவரோ
டந்தமில்கு ணத்தவர்க ளர்ச்சனைகள்
செய்யவமர் கின்றவரனூர்
கொந்தலர்பொ ழிற்பழன வேலிகுளிர்
தண்புனல்வ ளம்பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி
ரும்புபதி வீழிநகரே. 4

4. அந்தம் இல் - அளவில்லாத; கொந்து - கொத்து; பழனம்- வயல்.

பூதபதி யாகியபு ராணமுனி
புண்ணியநன் மாதைமருவிப்
பேதமதி லாதவகை பாகமிக
வைத்தபெரு மானதிடமாம்
மாதவர்க ளன்னமறை யாளர்கள்வ
ளர்த்தமலி வேள்வியதனல்
ஏதமதி லாதவகை யின்பமமர்
கின்றவெழில் வீழிநகரே. 5

5. பூதபதி - சிவபெருமான்; புராணமுனி - பழமையாகிய முனிவன்; புண்ணியநன்மாது - உமாதேவி; மறையாளர் - வேதியர்; வேள்வி ......... அமர்கின்ற - வேள்வி செய்தல் மன்னுயிர்களுக்கு இன்பம் பெருகுதற்பொருட்டேயாம்.

மண்ணின்மறை யோர்மருவு வைதிகமு
மாதவமு மற்றுமுலகத்
தெண்ணில்பொரு ளாயவை படைத்தவிமை
யோர்கள்பெரு மானதிடமாம்
நண்ணிவரு நாவலர்க ளோடுறும்வ
ளர்க்கநிகழ் கின்றபுகழ்சேர்
விண்ணுலவு மாளிகைநெ ருங்கிவளர்
நீள்புரிசை வீழிநகரே. 6

6. இமையோர்கள் பெருமான் - தேவர்களுக்குத் தேவன்.

மந்திரநன் மாமறையி னேடுவளர்
வேள்விமிசை மிக்கபுகைபோய்
அந்தரவி சும்பணவி யற்புதமெ
னப்படரு மாழியிருள்வாய்
மந்தரநன் மாளிகைநி லாவுமணி
நீடுகதிர் விட்டவொளிபோய்
வெந்தழல்வி ளக்கெனவி ரும்பினர்தி
ருந்துபதி வீழிநகரே. 7

7. அந்தரவிசும்பு - ஆகாயம்; இது ஒருபொருட்பன்மொழி; அணவி - மூடி; ஆழி இருள்வாய் - வட்டமாகிய இருளில்; வேள்வியில் எழுந்தபுகை இருளைச்செய்ய மாளிகைகளிற் பதித்தமணி விளக்கென (ஒளிவீசும்) பதி என்க.

ஆனவலி யிற்றசமு கன்றலைய
ரங்கவணி யாழிவிரலால்
ஊனமரு யர்ந்தகுரு திப்புனலில்
வீழ்தரவு ணர்ந்தபரனூர்
தேனமர்தி ருந்துபொழில் செங்கனக
மாளிகைதி கழ்ந்தமதிலோ
டானதிரு வுற்றுவள ரந்தணர்நி
றைந்தவணி வீழிநகரே. 8

8. தசமுகன் - இராவணன்; அரங்க - அழுந்த; அணி ஆழி விரலால் - அழகிய காற்பெரு விரலால்; குருதிப்புனல் - இரத்தநீர்.

ஏனவுரு வாகிமணி டந்தவிமை
யோனுமெழி லன்னவுருவம்
ஆனவனு மாதியினொ டந்தமறி
யாதவழன் மேனியவனூர்

வானணவு மாமதின்ம ருங்கலர்நெ
ருங்கியவ ளங்கொள்பொழில்வாய்
வேனலமர் வெய்திடவி ளங்கொளியின்
மிக்கபுகழ் வீழிநகரே. 9

9. ஏனம் - பன்றி; மண் இடந்த - மண்ணைத் தோண்டிய; அன்ன உருவம் ஆனவன் என்றது பிரமனை; ஆதியினோடந்தம் - அடிமுடி; வேனல் - வேனில்.

குண்டமண ராகியொரு கோலமிகு
பீலியொடு குண்டிகைபிடித்
தெண்டிசையு மில்லதொரு தெய்வமுள
தென்பரது வென்னபொருளாம்
பண்டையய னன்னவர்கள் பாவனைவி
ரும்புபரன் மேவுபதிசீர்
வெண்டரள வாணகைநன் மாதர்கள்வி
ளங்குமெழில் வீழிநகரே. 10

10. பீலி - மயில் தோகை; தாளவாள் நகை நன்மாதர்கள் - முத்துப்போலும் ஒளியுள்ள பற்களையுடைய நல்லபெண்கள்.

மத்தமலி கொன்றைவளர் வார்சடையில்
வைத்தபரன் வீழிநகர்சேர்
வித்தகனை வெங்குருவில் வேதியன்வி
ரும்புதமிழ் மாலைகள்வலார்
சித்திரவி மானமமர் செல்வமலி
கின்றசிவ லோகமருவி
அத்தகுகு ணத்தவர்க ளாகியனு
போகமொடி யோகவரதே. 11

11. மத்தம் - ஊமத்தை; வெங்குரு என்பது சீகாழிக்குள்ள பன்னிரு நாமங்களுள் ஒன்று.

திருச்சிற்றம்பலம்.

## 10. திருவிராகம்: பண் — சாதாரி

இராகம் — பந்துவராளி] [தாளம் — ஜம்பை

திருச்சிற்றம்பலம்

மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழன் மடவரல்
பட்டொளி மணியல்கு லுமையமை யுருவொரு பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியர வுடனுறை முடிமிசை
விட்டொளி யுதிர்பிதிர் மதியவர் பதிவிழி மிழலையே. 1

1. மட்டு - தேன்; சுரிகுழல் - சுருண்ட கூந்தல்; மடவரல் - பெண்; கட்டொளி - மிக்க ஒளி; கடி அரவு; அச்சத்தையுடைய பாம்பு; பிதிர் மதியவர் - பிறைச் சந்திரனை அணிந்தவர், பதி விழி மிழலையே என்க.

எண்ணிற வரிவளை நெறிகுழ லெழின்மொழி யிளமுலைப்
பெண்ணுறு முடலினர் பெருகிய கடல்விட மிடறினர்
கண்ணுறு நுதலினர் கடியதொர் விடையினர் கனலினர்
விண்ணுறு பிறையணி சடையினர் பதிவிழி மிழலையே. 2

2. நெறி குழல் - நெறித்த கூந்தல்; மிடறு - கழுத்து; கண் உறு நுதலினர் - நெற்றிக்கண்ணினர்; கடியது - விரைந்து செல்வது.

மைத்தகு மதர்விழி மலைமக ளொருவொரு பாகமா
வைத்தவர் மதகரி யுரிவைசெய் தவர்தமை மருவினூர்
தெத்தென விசைமுரல் சரிதையர் திகழ்தரு மரவினர்
வித்தக நகுதலை யுடையவ ரிடம்விழி மிழலையே. 3

3. மைத்தகு - கருமை பொருந்திய; மதர்விழி - செழித்த விழி: களித்த விழி; மதகரி உரிவை செய்தவர் - மதங்கொண்ட யானையின் தோலை உரித்தவர்; நகுதலை - பிரமகபாலம்.

செவ்வழ லெனநனி பெருகிய வுருவினர் செறிதரு
கவ்வழ லரவினர் கதிர்முதிர் மழுவினர் தொழுவிலா
முவ்வழ னிசிசரர் விறலவை யழிதர முதுமதில்
வெவ்வழல் கொளநனி முனிபவர் பதிவிழி மிழலையே. 4

4. செவ் அழல் - சிவந்த நெருப்பு; கவ் அழல் அரவினர் - கவ்வும் அரவு அழல்போலும் கொடிய அரவு எனத் தனித்தனிக் கூட்டுக. கதிர் முதிர் - ஒளி முதிர்ந்த; மு - மூன்று; நிசிசரர் - இரவில் சஞ்சரிப்பவர்: அசுரர்; நனி - மிகவும்.

பைங்கண தொருபெரு மழலைவெ ளேற்றினர் பலியெனு
எங்கணு முழிதர்வ ரிமையவர் தொழுதெழு மியல்பினர்
அங்கண ரமரர்க ளடியிணை தொழுதெழ வாரமா
வெங்கண வரவின ருறைதரு பதிவிழி மிழலையே. 5

5. பைங்கணது - பசியகண்ணையுடையது; ஏறு - இடபம்; ஏற்றினர் என இரட்டாமை சந்தம் நோக்கி; உழிதர்வர் - திரிவர்; ஆரம் - மாலை.

பொன்னன புரிதரு சடையினர் பொடியணி வடிவினர்
உன்னினர் வினையவை களைதலை மருவிய வொருவனுர்
தென்னென விசைமுரல் சரிதையர் திகழ்தரு மார்பினில்
மின்னென மிளிர்வதொ ரரவினர் பதிவிழி மிழலையே. 6

6. பொன் அன - பொன்னை ஒத்த; புரிசடை - முறுக்கு அமைந்த சடை; பொடி - விபூதி.

அக்கினொ டரவரை யணிதிக ழொளியதொ ராமைபூண்
டிக்குக மலிதலை கலனென விடுபலி யேகுவர்
கொக்கரை குழன்முழ விழவொடு மிசைவதொர் சரிதையர்
மிக்கவ ருறைவது விரைகமழ் பொழில்விழி மிழலையே. 7

7. அக்கு - சங்குமணி: எலும்பும் ஆம்; கலன் - பாத்திரம்; கொக்கரை, குழல், முழவு - இவை வாத்தியவகைகள்.

பாதமொர் விரலுற மலையடர் பலதலை நெரிதரப்
பூதமொ டடியவர் புனைகழ றொழுதெழு புகழினர்
ஓதமொ டொலிதிரை படுகடல் விடமுடை மிடறினர்
வேதமொ டுறுதொழின் மதியவர் பதிவிழி மிழலையே. 8

8. கழல் - திருவடி; திரை - அலை; மிடறு - கழுத்து.

நீரணி மலர்மிசை யுறைபவ னிறைகட லுறுதுயில்
நாரண னெனவிவ ரிருவரு நறுமல ரடிமுடி
ஓருணர் வினர்செல லுறலரு முருவினொ டொளிதிகழ்
வீரண ருறைவது வெறிகமழ் பொழில்விழி மிழலையே. 9

9. மலர்மிசை உறைபவன் என்றது பிரமனை; உறுதுயில் - மிக்க நித்திரை.

இச்சைய ரினிதென விடுபலி படுதலே மகிழ்வதோர்
பிச்சையர் பெருமையை யிறைபொழு தறிவென வுணர்விலர்
மொச்சைய வமணரு முடைபடு துகிலரு மழிவதோர்
விச்சைய ருறைவது விரைகமழ் பொழில்விழி மிழலையே. 10

10. மொச்சை - ஆட்டு நாற்றம்; முடை - துர்நாற்றம்; துகிலர் - ஆடையை யுடையவர்.

உன்னிய வருமறை யொலியினை முறைமிகு பாடல்செய்
இன்னிசை யவருறை யெழிறிகழ் பொழில்விழி மிழலையை
மன்னிய புகலியுண் ஞானசம் பந்தன வண்டமிழ்
சொன்னவர் துயரிலர் வியனுல குறுகதி பெறுவரே. 11

11. எழில் - அழகு; மன்னிய என்றது ஊழிக்காலத்தும் அழியாதிருந்த தன்மைகருதி.

திருச்சிற்றம்பலம்.

## 11. திருமுக்கால்: பண் — சாதாரி

இராகம் — பந்துவராளி] [தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி யணியுடை யீரே
ஒண்மதி யணியுடை யீருமை யுணர்பவர்
கண்மதி மிகுவது கடனே. 1

1. மதிதவழ் - சந்திரன் தவழும்படியான; மதிஅணி - பிறைச் சந்திரனாகிய அணி; மதிமிகுவது - அறிவுமிகுவது.

விதிவழி மறையவர் மிழலையு ளீர்நடம்
சதிவழி வருவதொர் சதிரே
சதிவழி வருவதொர் சதிருடை யீருமை
அதிகுணர் புகழ்வது மழகே. 2

2. சதிவழி - தாள ஒத்தின்வழி; சதிர் - நாட்டியம்.

விரைமலி பொழிலணி மிழலையு ளீரொரு
வரைமிசை யுறைவதும் வலதே
வரைமிசை யுறைவதொர் வலதுடை யீருமை
உரைசெயு மவைமறை யொலியே. 3

3. விரை - வாசம்; வரை - மலை; வலது - வலிமை.

விட்டெழில் பெறுபுகழ் மிழலையு ளீர்கையில்
இட்டெழில் பெறுகிற தெரியே
இட்டெழில் பெறுகிற தெரியுடை யீர்புரம்
அட்டது வரைசிலை யாலே. 4

4. எரி - அக்கினி; புரம் அட்டது - திரிபுரத்தை அழித்தது; வரை சிலையால் - மலையாகிய வில்லால்.

வேனிகர் கண்ணியர் மிழலையு ளீர்நலெ
பானிக ருருவுடை யீரே
பானிக ருருவுடை யீரும துடனுமை
தான்மிக வுறைவது தவமே. 5

5. வேல்நிகர் கண்ணியர் - வேல்போலும் கொடிய கண்ணை யுடைய பெண்கள்; பால் நிகர் உரு - பால்போலும் வெண்மையான உருவம்; "திருவுருவம் தெளிபளிங்கு" சதாசிவத்தியானம்.

விரைமலி பொழிலணி மிழலையு ளீர்செனி
நிரையுற வணிவது நெறியே
நிரையுற வணிவதொர் நெறியுடை யீருமதரையுற வணிவன வரவே. 6

6. செனி - சென்னி: முடி; நெறி - ஒழுங்கு; அரை - இடுப்பு; அரவு - பாம்பு.

விசையுறு புனல்வயன் மிழலையு ளீரர
வசையுற வணிவுடை யீரே
அசையுற வணிவுடை யீருமை யறிபவர்
நசையுறு நாவினர் தாமே. 7

7. விசை உறு புனல் - வேகமாகப்பாய்கின்ற நீர்; நசை - விருப்பம்.

விலங்கலொண் மதிலணி மிழலையு ளீரன்றவ்
இலங்கைம னிடர்கெடுத் தீரே
இலங்கைம னிடர்கெடுத் தீருமை யேத்துவார்
புலன்களை முனிவது பொருளே. 8

8. விலங்கல் - மலை; இலங்கை மன் - இராவணன்.

வெற்பமர் பொழிலணி மிழலையு ளீருமை
அற்புத னயனறி யானே
அற்புத னயனறி யாவகை நின்றவன்
நற்பத மறிவது நயமே. 9

9. வெற்பு - மலை; அயன் - பிரமன்; நயம் - நன்மை.

வித்தக மறையவர் மிழலையு ளீரன்று
புத்தரொ டமணழித் தீரே
புத்தரொ டமணழித் தீருமைப் போற்றுவார்
பத்திசெய் மனமுடை யவரே. 10

10. வித்தகம் - ஞானம்; சாதுரியம்.

விண்பயில் பொழிலணி மிழலையு ளீசனைச்
சண்பையுண் ஞானசம் பந்தன்
சண்பையுண் ஞானசம் பந்தன தமிழிவை
ஒண்பொரு ளுணர்வது முணர்வே. 11

11. சண்பை - சீகாழிக்குரிய பன்னிரு பெயர்களுள் ஒன்று.

திருச்சிற்றம்பலம்.

### 12. ஈரடி: பண் — பழம்பஞ்சுரம்

இராகம் — சங்கராபரணம்] [தாளம் — ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வேலினேர்தரு கண்ணினாளுமை
பங்கனங்கணன் மிழலைமாநகர்
ஆலநீழலின் மேவினானடிக்
கன்பர்துன் பிலரே. 1

1. வேலின் நேர்தரு - வேலினை ஒத்த; அம்கணன் - அழகிய நெற்றிக்கண்ணை உடையவன்; துன்பு - துன்பம்.

விளங்குநான்மறை வல்லவேதியர்
மல்குசீர்வள மிழலையானடி
உளங்கொள்வார்தமை யுளங்கொள்வார்வினை
யொல்லையா சறுமே. 2

2. மல்கு சீர் - மிக்க சிறப்பு; ஒல்லை - விரைவாக.

விசையினேடெழு பசையுநஞ்சினை
யசைவுசெய்தவன் மிழலைமாநகர்
இசையுமீசனை நசையின்மேவினுன்
மிசைசெயா வினையே. 3

3. எழுபு - எழுந்து; நசை - விருப்பம்.

வென்றிசேர்கொடி மூடுமாமதில்
மிழலைமாநகர் மேவிநாடொறும்
நின்றவாதிதன் னடிநினைப்பவர்
துன்பமொன் றிலரே. 4

4. வென்றி - வெற்றி; கொடிமூடு மாமதில் - கொடிகளினுல் மூடப்பெற்ற பெரியமதில்: கொடியின் மிகுதி குறித்தவாறு; ஆதி - ஆதி மூர்த்தி: சிவபெருமான்.

போதகந்தனை யுரிசெய்தோன்புயல்
நேர்வரும்பொழின் மிழலைமாநகர்
ஆதரஞ்செய்த வடிகள்பாதம
லாலொர்பற் றிலமே. 5

5. போதகம் - யானை; புயல் நேர்வரும் பொழில் - மேகத்தை எதிர்ப்படுகிற சோலை; ஆதரம் - அன்பு; பற்று - பற்றுக்கோடு: புகலிடம்.

தக்கன்வேள்வியைச் சாடினார்மணி
தொக்கமாளிகை மிழலைமேவிய
நக்கனாரடி தொழுவர்மேல்வினை
நாடொறுங் கெடுமே. 6

6. சாடினார் - அழித்தார்; நக்கன் - சிவபெருமான்.

போரணும்முப் புரமெரித்தவன்
பொழில்கள்சூழ்தரு மிழலைமாநகர்ச்
சேருமீசனைச் சிந்தைசெய்பவர்
தீவினை கெடுமே. 7

7. போர் அணும் - யுத்தத்தை விரும்பும்.

இரக்கமிஃறொழி லரக்கனாருடல்
நெருக்கினான்மிகு மிழலையானடி
சிரக்கொள்பூவென வொருக்கினார்புகழ்
பரக்குநீள் புவியே. 8

8. இஃறொழில் - இல் தொழில்; சிரக்கொள் பூ என - சிரசிற் சூடும் பூ எனும்படி; ஒருக்கினார் - ஒருப்படுத்தினார்.

துன்றுபூமகன் பன்றியானவன்
ஒன்றுமோர்கிலா மிழலையானடி
சென்றுபூம்புனல் நின்றுதூவினார்
நன்றுசேர் பவரே. 9

9. பூமகன் - பிரமன்; பன்றியானவன் - விட்டுணு.

புத்தர்கைச்சமண் பித்தர்பொய்க்குவை
வைத்தவித்தகன் மிழலைமாநகர்
சித்தம்வைத்தவ ரித்தலத்தினுள்
மெய்த்தவத் தவரே. 10

10. சித்தம் வைத்தவர் - தியானித்தவர்.

சந்தமார்பொழின் மிழலையீசனைச்
சண்பைஞானசம் பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ் பத்தும்வல்லவர்
பத்தரா குவரே. 11

11. சந்தம் - அழகு; சண்பை - சீகாழிக்குரிய பன்னிரு நாமங்களுள் இதுவும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்.

## 13. திருவியமகம்: பண் – பழம்பஞ்சுரம்

இராகம் – சங்கராபரணம்] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

துன்று கொன்றைநஞ் சடையதே
தூய கண்டநஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே
கல்லின் மானிடக் கையதே

என்று மேறுவ திடவமே
யென்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை யுள்ளுமே
நீரெனைச் சிறிது முள்ளுமே. 1

1. நம் சடையது, நஞ்சு அடையது எனப்பிரிக்க; இடக்கை - இடதுகை; கல்லின்மான் இடக்கையது - மலைமகளாகிய மான் போலும் உமையை இடதுபக்கத்திலுடையது; 'கல்வினற்பாவை யொர்பாகத்தர்' (பதிகம் 8, பாடல் 2) என்றதும் காண்க; இடவம் - இடபம்; பலி இட வம் - பலியிடவாரும்; மிழலையுள் - திருவீழிமிழலையில்; உள்ளும் - திருவுள்ளம் பற்றும்.

ஓதி வாயதும் மறைகளே
யுரைப்ப தும்பல மறைகளே
பாதி கொண்டதும் மாதையே
பணிகின் றேன்மிகு மாதையே
காது சேர்கனங் குழையரே
காத லார்கனங் குழையரே
வீதி வாய்மிகும் வேதியா
மிழலை மேவிய வேதியா. 2

2. மறைகள் - முன்னது வேதம் பின்னது உபதேசம்; மாதை - உமையை; மா தை - சிறந்த பூசத்திருநாள்: ஆதை எனப் பிரித்து ஆசை என்றலுமாம்; குழை - காதணி; வீதிவாய் மிகும் வேதிஆம் -வீதியிடத்தே மிகுந்த யாகமேடைகளையுடைய; வேதியா - வேதமோதுபவனே.

பாடு கின்றபண் டாரமே
பத்த ரன்னபண் டாரமே
சூடு கின்றது மத்தமே
தொழுத வென்னையுன் மத்தமே
நீடு செய்வதுந் தக்கதே
நின்ன ரைத்திகழ்ந் தக்கதே
நாடு சேர்மிழலை யூருமே
நாக நஞ்சழலை யூருமே. 3

3. தாரம் பண்வகையில் ஒன்று; அன்னபண்டாரம் - அன்ன சாலை; மத்தம் - ஊமத்தை; உன்மத்தம் - பித்து; தக்கதே - தகுந்ததே; அக்கு - எலும்பு; அழலை ஊரும் - நெருப்புபோலும் துன்புறுத்தும்.

கட்டுகின்ற கழ லுகமே
காய்ந்ததும் மதன னுகமே
இட்டமாவ திசை பாடலே
யிசைந்த நூலினமர் பாடலே
கொட்டுவான் முழவம் வாணனே
குலாயசீர் மிழலை வாணனே
நட்ட மாடுவது சந்தியே
நானுய்தற் கிரவு சந்தியே. 4

4. நாகம் - பாம்பு; மதனன் ஆகம் - மன்மதனின் உடல்; நூலின் அமர்பு ஆடல் - நூலிற் கூறியபடி ஆடுதல்; வாணன் - வாணாசுரன்: இவன் ஆயிரம் கைகளையுடையவன்; மிழலை வாணன் - மிழலையில்வாழ்பவன்: வாழ்நன் வாணன் என ஆயது; சந்தி - பொது இடம்; இரவு சந்தி - இரவில் சந்திப்பாயாக.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
No. 109649

ஓவி லாதிடுங் கரணமே
உன்னு மென்னுடைக் கரணமே
ஏவு சேர்வுநின் னாணையே
யருளி னின்னபொற் றாணையே
பாவி யாதுரை மெய்யிலே
பயின்ற நின்னடி மெய்யிலே
மேவி னுன்விறற் கண்ணனே
மிழலை மேயமுக் கண்ணனே. 5

5. கரணம் - முன்னது புணர்ச்சியையும் பின்னது மனம் புத்தி சித்தமாகிய அந்தக்கரணங்களையும் உணர்த்தின; ஏ - அம்பு; நாண - வில்லில் கட்டப்படும் கயிறு; பொற்ற ஆணை - அழகிய ஆக்ஞை; மெய்யில் - உண்மையில்; நின் அடி மெய்யில் - தேவரீர் திருவடி அடியேனுடலில் எப்பொழுதும் உள்ளன: மெய் ஈண்டு மனத்தைக் காட்டிற்று; விறல் கண்ணன் - வலிமைமிகுந்தவிட்டுணு; முக்கண்ணன் - சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய முக்கண்களையும் உடையான்.

வாய்ந்த மேனியெரி வண்ணமே
மகிழ்ந்து பாடுவது வண்ணமே
காய்ந்து வீழ்ந்தவன் காலனே
கடுநடஞ் செயுங் காலனே
போந்த தெம்மிடை யிரவிலே
யும்மிடைக் கள்ள மிரவிலே
ஏய்ந்ததும் மிழலை யென்பதே
விரும்பியே யணிவ தென்பதே. 6

6. எரி வண்ணன் - அக்கினி போலும் நிறமுடையான்; வண்ணம் - சந்தப்பாடல்; காலன் - இயமன்; நடஞ்செயும் காலன் -

023:417 N

நடனமாடும் திருவடியுடையான்; இரவு முன்னது யாசகம் என்ற பொருளையும் பின்னது இருள் என்ற பொருளையும் உணர்த்தின. மிழலை என்பது - திருவீழிமிழலை என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது; அணிவது என்பு அதே என்க.

அப்பி யன்றகண் ணயனுமே
யமரர் கோமகனு மயனுமே
ஒப்பி லின்றமரர் தருவதே
யொண்கையா லமரர் தருவதே
மெய்ப்ப யின்றவ ரிருக்கையே
மிழலை யூரும திருக்கையே
செப்புமின் னிருது மேயுமே
சேர்வுமக் கெருது மேயுமே. 7

7. அப்பு - நீர்; அயன் - பிரமன்; மயன் - தெய்வத்தச்சன்; ஒப்பிலின்று - ஒப்பில்லாதது; அமரர்தரு - கற்பகவிருக்ஷம்; தருவது - கொடுப்பது; மெய்பயின்றவர்இருக்கை - இருக்கு வேதத்தை உண்மை யாகப் பயின்றவர்; இருக்கை - இருப்பிடம்; இருது - ருதுவாகிய காலம்; எருது மேயும் என்க.

தான வக்குலம் விளக்கியே
தாரகைச் செல விளக்கியே
வான டர்த்த கயிலாயமே
வந்து மேவு கயிலாயமே
தானெ டுத்தவல் லரக்கனே
தடமுடித் திரள ரக்கனே
மேன டைச்செல விருப்பனே
மிழலை நற்பதி விருப்பனே. 8

8. செலவு இளக்கி - செல்லுதலை நெகிழச்செய்து; கயிலாயம் - கயிலாயமலை; கயில் - கொக்கி; ஆயம் - கூட்டம்; அரக்கன் என்றது இராவணனை; தடமுடித்திரள் அரக்கு - பெரிய சடைத்தொகுதி அரக்குபோன்றது: செஞ்சடையன் என்பதாம்; இருப்பன் விருப்பன் எனப் பிரித்துப் பொருள் கொள்க.

காய மிக்கதொரு பன்றியே
கலந்த நின்னவுரு பன்றியே
ஏய விப்புவி மயங்கவே
யிருவர் தாமன மயங்கவே
தூய மெய்த்திர ளகண்டனே
தோன்றி நின்றமணி கண்டனே
மேய வித்துயில் விலக்கணு
மிழலை மேவிய விலக்கணு. 9

9. காயம் - புண்; பன்றி - திருமாலாகிய பன்றி; உருபு - திருவடிவம்; இருவர் - பிரமனும் திருமாலும்; அகண்டன் - பகுக்கப் படாதவன்: சருவவியாபி என்பதாம்; மணிகண்டன் - நீலமணி போலும் திருக்கழுத்துடையான்; துயில் விலக்கு - அறியாமைத் தூக்கத்தினின்றும் நீக்குக; அண்ணு அணு என இடைக்குறை; இலக்கணு என்பது இலக்ஷணு என்பதன் திரிபு: ஒப்பற்ற அழகுடையவன் என்பதாம்.

கஞ்சியைக் குலவு கையரோ
கலக்கமா சமணர் கையரே
அஞ்ச வாதிலருள் செய்யநீ
யணைந்திடும் பரிசு செய்யநீ

வஞ்சனே வரவும் வல்லையே
மதித்தெனைச்சிறிதும் வல்லையே
வெஞ்ச லின்றிவரு வித்தகா
மிழலைசே ரும்விறல் வித்தகா. 10

10. கையர் - கையினையுடையார்; பின்னது கீழ்மையர் என்னும் பொருளில் வந்தது; அருள் செய்ய - அருள்பாலிக்க; செய்ய - செந்நிறமுடைய; வல்லை - வல்லமையுடையாய்; சிறிதும் வல்லையே - கொஞ்சமும் வரவில்லையே; கா - சோலை; வித்தகா - பேரறிவாளனே.

மேய செஞ்சடையி னப்பனே
மிழலைமே வியவெ னப்பனே
ஏயு மாசெய விருப்பனே
யிசைந்த வாசெய விருப்பனே
காய வர்க்கசம் பந்தனே
காழி ஞானசம் பந்தனே
வாயுரைத்த தமிழ் பத்துமே
வல்லவர்க்கு மிவை பத்துமே. 11

11. அப்பு - நீர்: இங்கு கங்கையை யுணர்த்திற்று; என் அப்பனே - என் தலைவனே; இருப்பன் விருப்பன் எனப்பிரிக்க; சம்பந்தன் - தொடர்புடையவன்; ஞானசம்பந்தன் பெயர் மாத்திரையாய் நின்றது. தமிழ்பத்து - தமிழ்ப்பாடல் பத்து; பத்தும் - பற்றும்.

திருச்சிற்றம்பலம்.

## 14. பண் – புறநீர்மை

இராகம் – பூபாளம்] [தாளம் – திருபுடை

திருச்சிற்றம்பலம்

புள்ளித்தோ லாடை பூண்பது நாகம்
பூசுசாந் தம்பொடி நீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டங்
காளியைக் குணஞ்செய்கூத் துடையோன்
அள்ளற்கா ராமை யகடுவான் மதியம்
ஏய்க்கமுட் டாழைகள் ஆனை
வெள்ளைக் கொம்பீனும் விரிபொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 1

1. ஆடை புள்ளித்தோல் என்க; பூண்பது நாகம் அணிவது பாம்பினை; சாந்தம் - சந்தனம்; நீறு - விபூதி; விளக்கு கொள்ளித்தீ கூட்டம் கூளிகள்; கூளிகள் - பேய்கள்; காளியைக் குணம் செய் கூத்துஎன்றது காளியோடாடி அடக்கியதை; அள்ளல் - குழைசேறு; அள்ளல் .........ஈனும் பொழில் - சேற்றில் உள்ள ஆமை ஆகாய நடுவில் காணப்படும் சந்திரனை ஒத்திருக்க, முள்ளையுடைய தாழை யானையினது வெள்ளைத் தந்தத்தைப் போல (மடல்) ஈனும் பொழில்; "வீழிமிழலையானென வினை கெடும்" என்பது மகுடம்.

இசைந்தவா றடியா ரிடுதுவல் வானோ
ரிழுகுசந் தனத்திளங் கமலப்
பசும்பொன்வா சிகைமேற் பரப்புவாய் கரப்பாய்
பத்திசெய் யாதவர் பக்கல்

அசும்புபாய் கழனி யலர்கயன் முதலோ
டடுத்தரிந் தெடுத்தவான் சும்மை
விசும்புதூர்ப் பனபோல் விம்மிய வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 2

2. துவல் - அருச்சிக்கும் பூ; பத்தி செய்யாதவர் பக்கல் கரப்பாய்; அசும்பு - இடையறு ஒழுக்கு; கழனி - வயல்; சும்மை - நெற்போர்; தூர்ப்பன போல் - மறைப்பன போல.

திருத்தனா றங்க னீற்றனுன் மறையன்
நீலமார் மிடற்றனெற் றிக்கண்
ஒருத்தன்மற் றெல்லா வுயிர்கட்கு முயிரா
யுளனிலன் கேடிலி யுமைகோன்
திருத்தமாய் நாளு மாடுநீர்ப் பொய்கை
சிறியவ ரறிவினின் மிக்க
விருத்தரை யடிவீழ்ந் திடம்புகும் வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 3

3. ஆறு அங்கன் - வேதாங்கம் ஆறினையும் அருளியவன்; ஒருத்தன் - தனியன்; கேடு இலி - அழிவில்லாதவன்; சிறியவர்... வீழ்ந்து இடம்புகும் மிழலை - சிறுவர்கள் அறிவிற் பெரியோரை அடிவணங்கிப் புகும் இடமாகிய திருவீழிமிழலை.

தாங்கருங் காலந் தவிரவந் திருவர்
தம்மொடுங் கூடினா ரங்கம்
பாங்கினுற் றரித்துப் பண்டுபோ லெல்லாம்
பண்ணிய கண்ணுதற் பரமர்

தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா விலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 4

4. அங்கம் - எலும்பு; பாங்கு - தகுதி; கமுகு - பாக்கு; தெங்கு - தென்னை; வெயில்புகா - மரங்களின் செறிவினுல் சூரிய கிரணம் புகாத: "வெயில் நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பு" என்றதும் காண்க.

கூசுமா மயானங் கோயில்வா யிற்கட்
குடவயிற் றனசில பூதம்
பூசுமா சாந்தம் பூதிமெல் லோதி
பாதிநற் பொங்கர வரையோன்
வாசமாம் புன்னை மௌவல்செங் கழுநீர்
மலரணைந் தெழுந்தவான் தென்றல்
வீசுமாம் பொழிற்றேன் துவலைசேர் வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 5

5. குடவயிற்றன - குடம்போலும் வயிற்றையுடைய; பூதி - விபூதி; மெல்லோதி - மென்மையான கூந்தலையுடைய உமாதேவி: அன்மொழித்தொகை; அரவு அரையோன் - பாம்பினை இடையிற் சுற்றியவன்; துவலை - துளி.

பாதியோர் மாதர் மாலுமோர் பாகர்
பங்கயத் தயனுமோர் பாலர்
ஆதியாய் நடுவா யந்தமாய் நின்ற
அடிகளா ரமரர்கட் கமரர்

போதுசேர் சென்னிப் புரூரவாப் பணிசெய்
பூசுரர் பூமக னனைய
வேதியர் வேதத் தொலியறு வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 6

6. பாதி............பாலர் - உமை யொருபாக முடையவர், விட்டுணுவையும் பிரமனையும் பாகமாக உடையவர்; புரூரவா பணி செய் பூசுரர் - புரூரவச்சக்ரவர்த்தியினால் வணங்கப்பெற்ற அந்தணர்; பூமகன் - பிரமன்; அறு - நீங்காத.

தன்றவம் பெரிய சலந்தர னுடலந்
தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத்
திறையவன் பிறையணி சடையன்
நின்றநாள் காலை யிருந்தநாள் மாலை
கிடந்தமண் மேல்வரு கலியை
வென்றவே தியர்கள் விழாவறு வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 7

7. அரி - விட்டுணு; நின்ற நாள் காலை.........மண்மேல் - நின்றான் இருந்தான் கிடந்தான் எனப்படும் மண்ணின் மேல்; கலி - நுகரும் பொருள் இல்லாமையால் வரும் வருத்தம்.

கடுத்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த
காமுறஞ் சிரநெரிந் தலற
அடர்த்ததோர் விரலா லஞ்செழுத் துரைக்க
அருளினன் தடமிகு நெடுவாள்

படித்தநான் மறைகேட் டிருந்தபைங் கிளிகள்
　　　பதங்களை யோதப்பா டிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
　　　மிழலையா னெனவினை கெடுமே. 8

8. கடுத்த வாள் அரக்கன் - கோபித்த வாள்போலும் பற்களை யுடைய இராவணன்; கரம் உரம் சிரம் - கை மார்பு தலை இவைகள்; அஞ்செழுத்து - ஸ்ரீ பஞ்சாக்கரம்; வாள் அருளினன் என்க; (சிறுவர்கள்) படித்த வேதங்களைக் கேட்டிருந்த பசிய கிளிகள் அவ் வேதங்களை ஓதப் பக்கத்திருந்த சிறுகிளிகள் பயிலும் என்பது பின் னடிகளின் கருத்து. பயிற்றும் தன்வினைப் பொருளில் வந்தது; பாடு - பக்கம்.

அளவிட லுற்ற வயனொடு மாலும்
　　　அண்டமண் கெண்டியுங் காணா
முளையெரி யாய மூர்த்தியைத் தீர்த்த
　　　முக்கணெம் முதல்வனை முத்தைத்
தளையவிழ் கமலத் தவிசின்மே லன்னந்
　　　தன்னிளம் பெடையொடும் புல்கி
விளைகதிர் கவரி வீசவீற் றிருக்கு
　　　மிழலையா னெனவினை கெடுமே. 9

9. அண்டம் மண் - ஆகாயத்தையும் மண்ணையும்; கெண்டி - தேடி; தளை அவிழ் கமலத் தவிசு - முறுக்கு நெகிழ்ந்த தாமரை ஆசனம்; விளைகதிர் கவரிவீச - வயலில் விளையும் நெற்கதிர் சாமரை இரட்டுவதுபோல வீச;. இப்பின்னடிகளின் கருத்து 7-வது பதிகம் 2- வது பாடலின் கருத்தோடு ஒத்துள்ளமை காண்க.

கஞ்சிப்போ துடையார் கையிற்கோ சாரக்
கலதிகள் கட்டுரை விட்டு
அஞ்சித்தே விரிய வெழுந்தநஞ் சதனை
யுண்டம ரர்க்கமு தருளி
இஞ்சிக்கே கதலிக் கனிவிழக் கமுகின்
குலையொடும் பழம்விழத் தெங்கின்
மிஞ்சுக்கே மஞ்சு சேர்பொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே. 10

10. தே இரிய - தேவர்கள் அஞ்சி ஓட; இஞ்சிக்கே......... மஞ்சு சேர் - இஞ்சிச்செடியின்மீது வாழைக்கனி விழும்படி கமுகின் குலையோடும் தெங்கம்பழம் விழும்படியாக உள்ள அத்தெங்கின் உச்சியில் மேகம் சேரும்படியான; மஞ்சு - மேகம்; இஞ்சிச்செடி, வாழை, கமுகு, தென்னை, மேகம் ஆகிய இவை ஒன்றனுக்கொன்று முறையே உயர்ந்திருக்கின்றமை கண்டு இன்புறுதற்குரியது.

வேந்தர்வந் திறைஞ்ச வேதியர் வீழி
மிழலையுள் விண்ணிழி விமானத்
தேய்ந்ததன் றேவி யோடுறை கின்ற
ஈசனை யெம்பெரு மானைத்
தோய்ந்தநீர்த் தோணி புரத்துறை மறையோன்
தூமொழி ஞானசம் பந்தன்
வாய்ந்தபா மாலை வாய்நவில் வாரை
வானவர் வழிபடு வாரே. 11

11. தோணிபுரம் என்பது சீகாழியின் மறுபெயர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## 15, திருநேரிசை (க)

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

பூதத்தின் படையர் பாம்பின் பூணினர் பூண நூலர்
சீதத்திற் பொலிந்த திங்கட்கொழுந்தர்நஞ் சமுந்து கண்டர்
கீதத்திற் பொலிந்த ஓசைக் கேள்வியர் வேள்வி யாளர்
வேதத்தின் பொருளர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 1

1. பூணினர் - ஆபரணர்; சீதம் - குளிர்ச்சி; திங்கட்கொழுந்து-பிறைச்சந்திரன்; வேதத்தின் பொருளர் - வேதப்பொருளாயுள்ளவர்.

காலையிற் கதிர்செய் மேனி கங்குலிற் கறுத்த கண்டர்
மாலையில் மதியஞ் சேர்ந்த மகுடத்தர் மதுவும் பாலும்
ஆலையிற் பாகும் போல அண்ணித்திட் டடியார்க் கென்றும்
வேலையின் அமுதர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 2

2. காலையிற் கதிர்செய் மேனி - உதய சூரியன் போல ஒளி செய்கின்ற சிவந்த மேனி; கங்குல் - இரவு; மகுடத்தர் - சடாமுடியுடையவர்; மது - தேன்; ஆலையிற் பாகு - ஆலையில் கருப்பஞ்சாற்றாற் காய்ச்சிய பாகு; அண்ணித்தல் - இனித்தல்; வேலையின் அமுத - திருப்பாற்கடலிற்றோன்றிய அமுதம்.

வருந்தின நெருநல் இன்றாய் வழங்கின நாளர் ஆல்கீழ்
இருந்துநன்பொருள்கள்நால்வர்க்கியம்பினர் இருவரோடும்
பொருந்தினர்பிரிந்துதம்பாற்பொய்யராமவர்கட்கென்றும்
விருந்தினர் திருந்து வீழி மிழலையுள் விகிர்த னாரே. 3

3. வரும் தினம் - நாளை; நெருநல் - நேற்று; இன்று - இந்நாள்; வழங்கின நாளர் - முக்காலமாய் வழங்கின நாளாயிருப்பவர்; இருவரோடும் பிரிந்து பொருந்தினர் - பிரமவிட்டுணுக்களோடும் பிரிந்து பொருந்தியவர்; பொய்யராமவர்கட்கு என்றும் விருந்தினர் - பொய்யர்களுக்குப் புதுமையாயிருப்பவர்.

நிலையிலா வூர்மூன் றொன்ற நெருப்பரி காற்றம் பாகச்
சிலையுநா ணதுவு நாகங் கொண்டவர் தேவர் தங்கள்
தலையினால் தரித்த என்புந் தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 4

4. நிலையிலா ஊர் - ஓரிடத்தில் நிலைத்திராமல் வானிற் றிரிகின்ற முப்புரம்; நெருப்பு அரி காற்று அம்பாக - நெருப்பும் விட்டுணுவும், காற்றும் பாணமுமாக; "வல்வாய் எரி காற்று ஈர்க்கு அரி கோல்" (என 1-6) முன்னும் "மாருதம் மால் எரி மூன்றும் வாய் அம்பு ஈர்க்காம்" எனப் (19-9) பின்னும் பலவிடத்தும் வருவன காண்க. சிலையும் நாண் அதுவும் நாகம் - வில்லும் நாகம், நாணும் நாகம்; நாகம் - மலை: பாம்பு; தலையினால்தரித்தஎன்பு - பிரமவிட்டுணுக்களுடைய தலை ஓடுகளையே மாலையாகத் தரித்தது; தலைமயிர் வடம் - அப்பிரம விட்டுணுக்களுடைய தலைமயிரையே வடமாக மார்பிற் றரித்தது; விலையிலா வேடர் - மதிப்பிடமுடியாத வேடத்தவர்.

மறையிடைப் பொருளர் மொட்டின் மலர்வழி வாசத் தேனர்
கறவிடைப் பாலின் நெய்யர் கரும்பினிற் கட்டி யாளர்
பிறையிடைப்பாம்புகொன்றைப்பிணையல்சேர்சடையுள்நீரர்
விறகிடைத் தீயர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 5

5. மறையிடைப் பொருளர் - வேதத்துட் பொருளர்; மொட்டின் மலர்வழி வாசத்தேனர் - அரும்பு மலரும்போது வெளிப்படும் வாசத்தையுடைய தேன்போலும் இனியர்; கறவு - கறவைப் பசு; பாலின் நெய்யர் - பாலிற்படும் நெய்போல் இனியர்; கரும்பினிற்கட்டி - கற்கண்டு; கொன்றைப் பிணையல் - கொன்றைமாலை; சடையுள் நீரர் - சடையில் கங்கையைத் தரித்தவர்; விறகிடைத் தீயர் - விறகிடைத் தீ கடைந்துழித் தோன்றுவது போல அவனருளால் ஆராய்வார்க்கு வெளிப்படுபவர்.

எண்ணகத் தில்லை அல்லர் உளரல்லர் இமவான் பெற்ற
பெண்ணகத் தரையர் காற்றில் பெருவலி யிருவ ராகி
மண்ணகத் தைவர் நீரில் நால்வர்தீ யதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 6

6. எண் அகத்து - எண்ணத்துள்: எண்ணுள் எனினுமாம்; இல்லை அல்லர் - இல்லாதவர் அல்லர்: உளர்; உளர் அல்லர் - உள்ளவருமல்லர்; பெண்ணகத்து அரையர் - உமாதேவியைப் பாதி பாகமாகக் கொண்டவர்; காற்றில் இருவர்......விண்ணகத்து ஒருவர் - ஆகாயம் முதலிய ஐம்பூதங்களிலும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து குணங்களாயிருப்பார் என்பது; இதனை 'மண் அதனில் ஐந்தை'' எனத்தொடங்கும் கற்குடித் தாண்டகத்தாலும் "பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி......வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி" எனவரும் திருவாசகம் போற்றித் திருஅகவலினாலும் அறிக.

சந்தணி கொங்கை யாளோர் பங்கினர் சாம வேதர்
எந்தையும் எந்தை தந்தை தந்தையு மாய ஈசர்
அந்தியோ டுதயம் அந்த ணாளர்ஆன் நெய்யால் வேட்கும்
வெந்தழ லுருவர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 7

7. சந்து - சாந்து: சந்தனம்; கொங்கையாள் - முலையினை உடையாள்: உமாதேவியார்; அந்தியோடு உதயம் - மாலையும் காலையும்; ஆன்நெய்யால் வேட்கும் - பசுவின் நெய்கொண்டு யாகஞ் செய்யும்; தழல் உருவர் - அக்கினி போலும் செந்நிற உருவினர்.

நீற்றினை நிறையப் பூசி நித்தல்ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி ஒருநா ளொன்று குறையக்கண் நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி அவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 8

8. நீற்றின்......கோயில் - சிவபெருமான் சலந்தரனைத்தடிந்த சக்கராயுதத்தைத் தான் பெறவிரும்பிய விட்டுணுமூர்த்தி, திருநீற்றை உடல் நிறையப்பூசி, தினமும் ஆயிரம் தாமரைப் பூக்கொண்டு வழிபட்டுவரும்நாளில் ஒருநாள் ஒருபூக்குறைய அதனை நிறைப்பதற்காகத் தனது தாமரைமலர்போலுங் கண்ணையே இடந்து அருச்சித்து வழிபட்டு அச்சக்கராயுதம் பெற்று, வானுலகத்திருந்து விமானம்கொண்டு வந்து அமைத்த வரலாறு விளக்கமாகக் கூறப்பட்டது காண்க.

சித்திசெய் பவர்கட் கெல்லாஞ் சேர்விடஞ் சென்று கூடப்
பத்திசெய் பவர்கள் பாவம் பறிப்பவர் இறப்பி லாளர்
முத்திசெய் பவள மேனி முதிரொளி நீல கண்டர்
வித்தினில் முளையர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 9

9. பறிப்பவர் - போக்குபவர்.

தருக்கின அரக்கன் தேரூர் சாரதி தடைநி லாது
பொருப்பினைஎடுத்ததோளும்பொன்முடிபத்தும்புண்ணாய்
நெரிப்புண்டலங் கலறி மீண்டு நினைந்தடி பரவத் தம்வாள்
விருப்பொடுங் கொடுப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 10

10. சாரதி தடைநிலாது - சாரதிதடுத்தும்நில்லாது; இதனைக் "கடுகிய தேர் செலாது, கயிலாயமீது கருதேல் உன் வீரம் ஒழி நீ முடுகுவதன்று தன்மம் எனநின்று பாகன் மொழிவானை நன்று முனியா" எனவரும் (அப்பர் - பொது - தசபுராணம்) திருப்பதிகத்தாலும் அறிக.

திருச்சிற்றம்பலம்.

## 16. திருவிருத்தம் (உ)

இராகம் – நவரோஸ்] [தாளம் – திருபுடை

திருச்சிற்றம்பலம்

வான்சொட்டச் சொட்டநின் றட்டும் வளர்மதி யோடயலே
தேன்சொட்டச்சொட்டநின் றட்டுந்திருக்கொன்றைசென்னிவைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர் மணிநீர் மிழலையுள்ளீர்
நான்சட்ட நும்மை மறக்கினும் என்னைக்குறிக்கொண்மினே.

1. வான்.........அட்டும் - வானில் (அழகு) மிகத்துளிக்க நின்று பொருந்தும்; அயல் - பக்கம்; மான்பெட்டை நோக்கி - பெண்மான் போலும் பார்வையுடைய உமாதேவி: இ விகுதி பெண்பாலுணர்த்தியது; சட்ட - முழுதும்; குறிக்கொண்மின் - காத்தலைக் குறியாகக் கொள்வீராக.

அந்தமும் ஆதியு மாகிநின் றீரண்டம் எண்திசைக்கும்
பந்தமும் வீடும் பரப்புகின் றீர்பசு ஏற்றுகந்தீர்
வெந்தழல் ஓம்பு மிழலையுள் ளீரென்னைத் தென்திசைக்கே
உந்திடும் போது மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே.

2. அண்டம் எண் திசையும் - எட்டுத்திக்குக்களிலுள்ள அண்டங்களினும்; பந்தமும் வீடும் - மறைப்பையும் அருளையும்; எனவே பஞ்சகிருத்தியமும் கூறியவாறாயிற்று; பசு இங்கே இடபம்; ஏற்று - ஏறுதல்: முதனிலைத் தொழிற்பெயர்; தென் திசைக்கே உந்திடும் போது - இயமன் தனக்குரிய தெற்குத்திக்குக்குத் தள்ளிச் செல்லுகின்றபோது.

அலைக்கின்ற நீர்நிலங் காற்றனல் அம்பர மாகிநின்றீர்
கலைக்கன்று சேருங் கரத்தீர் கலைப்பொரு ளாகிநின்றீர்
விலக்கின்றி நல்கும் மிழலையுள் ளீர்மெய்யிற் கையொடுகால்
குலைக்கின்று நும்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே

3. அலைக்கின்ற............நின்றீர் - பஞ்சபூதமாகி நின்றீர்; அம்பரம் - ஆகாயம்; கலைக்கன்று - மான்கன்று; விலக்கு இன்றி நல்கும் மிழலை யுள்ளீர் - யாவருக்கும் ஒருசேர அருள்செய்யும் மிழலை ஈசரே; குலைக்கின்று - நிலை தளர்கின்றது.

தீத்தொழி லான்தலை தீயிலிட் டுச்செய்த வேள்விசெற்றீர்
பேய்த்தொழி லாட்டியைப் பெற்றுடையீர்பிடித் துத்திரியும்
வேய்த்தொழி லாளர் மிழலையுள் ளீர்விக்கி அஞ்செழுத்தும்
ஓத்தொழிந்நும்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

4. தீத்தொழிலான் - சிவபெருமானை நிந்தித்தலாகிய தீய தொழிலைச் செய்த தக்கன்; செற்றீர் - அழித்தீர்; பேய்த்தொழிலாட்டி - காளி; பெற்று - யாகத்தை அழித்தற் பொருட்டு வீரபத்திரரோடு காளியையும் படைத்து; ஒத்து - ஓதுதல்.

தோட்பட்ட நாகமுஞ் சூலமுஞ் சுற்றியும் பத்திமையால்
மேற்பட்ட அந்தணர் வீழியும் என்னையும் வேறுடையீர்
நாட்பட்டு வந்து பிறந்தேன் இறக்க நமன்தமர்தம்
கோட்பட்டுநும்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

5. நாகம் - பாம்பு; நமன்தமர்தம் கோள்பட்டு - இயமதூதர் களுடைய வலியுள் அகப்பட்டு.

கண்டியிற் பட்ட கழுத்துடை யீர்கரி காட்டிலிட்ட
பண்டியிற் பட்ட பரிகலத் தீர்பதி வீழிகொண்டீர்
உண்டியிற் பட்டினி நோயில் உறக்கத்தில் உம்மைஐவர்
கொண்டியிற்பட்டுமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

6. கண்டி - உருத்திராக்கம்; கரிகாடு - சுடுகாடு; பண்டி - உடல்; பரிகலம் - பிரமகபாலமாகிய பாத்திரம்; உண்டியில்......... மறக்கினும் - பேருணவிலும், பட்டினியிலும், நோயிலும், உறக்கத்திலும், பஞ்சேந்திரியக்கள்வர்கொள்ளையிலும்பட்டு நான்மறக்கிலும்.

தோற்றங்கண் டான்சிர மொன்று கொண்டீர் தூயவெள்ளெருதொன்
றேற்றங்கொண் டீரெழில் வீழி மிழலை யிருக்கைகொண்டீர்
சீற்றங்கொண்டென்மேற்சிவந்ததொர்பாசத்தால்வீசியவெங்
கூற்றங்கண்டும்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

7. தோற்றம் கண்டான் - படைத்தவனாகிய பிரமன்; ஏற்றம் - ஏறுதல்; இருக்கை - இருப்பிடம்; சீற்றம் - கோபம்; பாசம் - கயிறு; கூற்றம் - இயமன்.

சுழிப்பட்ட கங்கையுந் திங்களுஞ் சூடிச்சொக் கம்பயின்றீர்
பழிப்பட்ட பாம்பரைப் பற்றுடை யீர்படர் தீப்பருக
விழிப்பட்ட காமனை விட்டீர் மிழலையுள் ளீர்பிறவிச்
சுழிப்பட்டுநும்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

8. சுழிப்பட்ட - மிகுதியும் வேகமும் கொண்ட நீரில் காற்றினால் சுழி தோன்றல் இயல்பு; சொக்கம் - கூத்து; விழிப்பட்ட காமனை வீட்டீர் - விழிக்குத் தென்பட்ட காமனை அழித்தீர்.

பிள்ளையிற்பட்ட பிறைமுடி யீர்மறை யோதவல்லீர்
வெள்ளையிற் பட்டதோர் நீற்றீர் விரிநீர் மிழலையுள்ளீர்
நள்ளையிற் பட்டைவர் நக்கரைப் பிக்க நமன்தமர்தம்
கொள்ளையிற்பட்டுமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

9. பிள்ளையிற் பட்டபிறை - இளம் பிறை; நீறு - விபூதி; நள் ஐயில் பட்டு ஐவர் நக்கு அரைப்பிக்க - செறிந்த கோழையிற் பட்டுப் பஞ்சேந்திரியங்கள் பரிகசித்து வருத்த.

கறுக்கொண் டரக்கன் கயிலையைப் பற்றிய கையும்மெய்யும்
நெறுக்கென் றிறச்செற்ற சேவடி யாற்கூற்றை நீறுசெய்தீர்
வெறிக்கொன்றை மாலை முடியீர் விரிநீர் மிழலையுள்ளீர்
இறக்கின்று நம்மைமறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே.

10. கறு - கோபம்; நெறுக்கென்று - ஒலிக்குறிப்பு; இற - ஒடிய; வெறி - மணம்; இறக்கின்று - இறக்குங்காலத்து.

திருச்சிற்றம்பலம்,

## 17. திருக்குறுந்தொகை (கூ)

இராகம் – நாதநாமக்கிரியை] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

கரைந்து கைதொழு வாரையுங் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோரவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. 1

1. கரைந்து - மனம் உருகி; காதலன்-விரும்பலன்; வீடலன்-அழிப்பவனல்லன்; விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்பது கருத்து; பாரிடத்தோர் - பூமியிலுள்ளார்.

ஏற்று வெல்கொடி யீசன்ற னாதிரை
நாற்றஞ் சூடுவர் நன்னறுந் திங்களார்
நீற்றுச் சந்தன வெள்ளை விரவலார்
வேற்றுக் கோலங்கொள் வீழி மிழலையே. 2

2. ஏற்றுக்கொடி - இடபக்கொடி; ஆதிரை - திருவாதிரை; இது சிவபெருமானுக்குரிய நாள்.

புனைபொற் சூலத்தன் போர்விடை யூர்தியான்
வினைவெல் நாகத்தன் வெண்மழு வாளினன்
நினைய நின்றவ னீசனை யேயென
வினையி லார்தொழும் வீழி மிழலையே. 3

3. விடையூர்தி - இடபவாகனம்; மழுவாளினன் - மழுப்படையையுடையவன்.

மாடத் தாடு மனத்துடன் வைத்தவர்
கோடத் தார்குருக் கேத்திரத் தார்பலர்
பாடத் தார்பழிப் பார்பழிப் பல்லதோர்
வேடத் தார்தொழும் வீழி மிழலையே. 4

4. குருக்கேத்திரத்தார் - குருக்ஷேத்திரத்தவர்.

எடுத்த வெல்கொடி யேறுடை யான்தமர்
உடுப்பர் கோவணம் உண்பது பிச்சையே
கெடுப்ப தாவது கீழ்நின்ற வல்வினை
விடுத்துப் போவது வீழி மிழலைக்கே. 5

5. தமர் - சுற்றத்தவர் - அடியவர்; இறைவன் உடுப்பதும், உண்பதும், கெடுப்பதும், விடுத்துப்போவதும் இவை என்கிறது.

குழலை யாழ்மொழி யாரிசை வேட்கையால்
உழலை யாக்கையை யூணும் உணர்விலீர்
தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினேம்
மிழலை யானடி சாரவின் ணுள்வரே. 6

6. குழலை யாழ் மொழியார் - குழலும் யாழும் போலும் இனிய மொழியையுடைய பெண்கள்; ஐ சாரியை; வேட்கை - விருப்பம்; ஊணும் - ஊன்றும்; உறுதியாகக்கொள்ளும் என்ற பொருள்போலும்: 'தழலை நீர் மடிக் கொள்ளன்மின்' என்பது உலகப் பழமொழி: பெண்களிடம் வேட்கைகொள்ளுதல் நெருப்பை மடியிற் கட்டிக்கொள்ளுதல்போல் அபாயந்தரும் என்பது கருத்து.

தீரன் தீத்திர ளன்சடைத் தங்கிய
நீரன் ஆடிய நீற்றன்வண் டார்கொன்றைத்
தாரன் மாலையன் தண்நறுங் கண்ணியன்
வீரன் வீழி மிழலை விகிர்தனே. 7

7. தீரன் - மனத்திடமுள்ளவன்; தீத்திரளன் - அக்கினி வடிவினன்; தாரன் - மாலையை யுடையவன்; தார், மாலை, கண்ணி என்பன மாலை விகற்பங்கள்.

எரியி னாரிறை யாரிடு காட்டிடை
நரியி னார்பிரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை
விரியி னார்தொழும் வீழி மிழலையே. 8

8. எரியினர் - அக்கினிவடிவினர்; இறையார் - தலைவர்; இடுகாடு - சுடுகாடு; நரியினர் பிரியாமகிழ்கின்றதோர் இடுகாட்டிடை என்க; பிரியா - பிரியாமல்; விரியினர் - நீங்கியவர்.

நீண்ட சூழ்சடை மேலொர் நிலாமதி
காண்டு சேவடி மேலொர் கனைகழல்
வேண்டு வாரவர் வீதி புகுந்திலர்
மீண்டும் போவது வீழி மிழலைக்கே. 9

9. காண்டு - காணத்தக்க; நிலாமதிவேண்டுவார், கனைகழல் வேண்டுவார் எனத் தனித்தனிக்கூட்டுக.

பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்
ஆலை யாரழல் அந்தண ராகுதி
வேலை யார்தொழும் வீழி மிழலையே. 10

10. மாலை-மாலைக்காலத்தில்; ஆலை ஆர் அழல் அந்தணர் ஆகுதி வேலையார்-கரும்பு ஆலையைப்போல மிக்க அழலில் வேள்விசெய்பவர்.

மழலை யேற்று மணாளன் திருமலை
சுழல ஆர்த்தெடுத் தான்முடி தோளிறக்
கழல்கொள் காலில் திருவிரல் ஊன்றலும்
மிழலை யானடி வாழ்கென விட்டதே. 11

11. மழலை ஏறு - இளமைபொருந்திய இடபம்; மணாளன் - ஆண்மகன்; சுழல ஆர்த்து எடுத்தான் - சுழலும்படி ஆரவாரித்து எடுத்த இராவணன்; காலின் திருவிரல் ஊன்றலும் (அவ்விராவணன்) மிழலையான் திருவடிவாழ்க என (வாழ்த்தியதும் அத்திருவடி) விடுவித்தது என வருவித்து முடிக்க.

திருச்சிற்றம்பலம்.

## 18. திருக்குறுந்தொகை (ச)

இராகம் – நாதநாமக்கிரியை] [தாளம் – சாபு

திருச்சிற்றம்பலம்

என்பொ னேஇமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலந் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேஅடி யேனைக் குறிக்கொளே. 1

1. நலம் தீங்கு அறிவு ஒன்று இலேன் – நன்மை தீமை அறியும் அறிவு சிறிதும் இலாத யான்; அடியேனைக் குறிக்கொள் என்பது மகுடம்.

கண்ணி னாற்களி கூரக்கை யால்தொழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேஅடி யேனைக் குறிக்கொளே. 2

2. கண்ணினால்............தனை – கண்ணாற்கண்டு களிப்புமிக கையால்தொழுது தியானிக்குவிதம் அறியாது இளைக்கும் என்னை.

ஞால மேவிசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்றொழும்
சீல மேதிரு வீழி மிழலையுள்
கோல மேஅடி யேனைக் குறிக்கொளே. 3

3. ஞாலம் – பூமி; விசும்பு – ஆகாயம்; கடவுள் ஞாலமாயும், விசும்பாயும், நலமாயும், தீமையாயும், காலமாயும், சீலமாயும் இருப்பவர் என்பது; கோலம் – அழகு: உருவம் எனினுமாம்.

முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
ஒத்த னேஒரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையுள்
அத்த னேஅடி யேனைக் குறிக்கொளே. 4

4. முத்தன் - இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன்; ஒத்தன் - ஒத்தவன்; ஒருவா - நீங்காத; அத்தன் - தலைவன்.

கருவ னேகரு வாய்த்தெளி வார்க்கெலாம்
ஒருவ னேஉயிர்ப் பாய்உணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுள்
குருவ னேஅடி யேனைக் குறிக்கொளே. 5

5. கருவன் - கருவாயிருப்பவன்: கர்வன் எனினுமாம்; உயிர்ப்பாய் உணர்வாய் - சுவாசமாயும் அறிவாயும்; திருவன் - செல்வன்; குருவன் - குருவடிவமானவன்.

காத்த னேபொழில் ஏழையுங் காதலால்
ஆத்த னேஅம ரர்க்கயன் றன்தலை
சேர்த்த னேதிரு வீழி மிழலையுள்
கூத்த னேஅடி யேனைக் குறிக்கொளே. 6

6. காத்தன் - காத்தவன்; பொழில் - உலகம்; பொழிலேழை யுங் காத்தவன் என்க; அமரர்கட்கு ஆத்தன் - தேவர்களுக்குத் தலைவன்; சேர்த்தன் - சேர்த்தவன்.

நீதி வானவர் நித்தல் நியமஞ்செய்
தோதி வானவ ரும்உண ராததோர்
வேதி யாவிவிர் தாதிரு வீழியுள்
ஆதி யேஅடி யேனைக் குறிக்கொளே. 7

7. நியமம்செய்து - முறையேவழிபட்டு; ஆதி - முதல்வன்.

பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச் சாடிய
அழக னேஅணி வீழி மிழலையுள்
குழக னேஅடி யேனைக் குறிக்கொளே. 8

8. பாலனை என்றது மார்க்கண்டனை; கழகு - ஓலக்கம்: திருச்சமுகம்; கடவுள்முன்னிலையில் பாலன்மேல் (பாசம்) வைத்த காலன் எனம்பொருள்படும்போலும்; குழகன் - சிவன்.

அண்ட வானவர் கூடிக்க டைந்தநஞ்
சுண்ட வானவ னேஉணர் வொன்றிலேன்
விண்ட வான்பொ ழில் வீழி மிழலையுள்
கொண்ட னேஅடி யேனைக் குறிக்கொளே. 9

9. உணர்வு ஒன்று இலேன் - அறிவு சிறிதும் இல்லேன்.

ஒருத்தன் ஓங்கலைத் தாங்கலுற் றானுரம்
வருத்தி னாய்வஞ்ச னேன்மனம் மன்னிய
திருத்த னேதிரு வீழி மிழலையுள்
அருத்த னேஅடி யேனைக் குறிக்கொளே. 10

10. ஓங்கலைத் தாங்கலுற்றான் ஒருத்தன் என்க; ஓங்கல் - மலை; ஒருத்தன் - இராவணன்; அருத்தன் - செல்வன்.

திருச்சிற்றம்பலம்.

## 19. திருத்தாண்டகம் (ரு)

### இராகம் – ஹரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

போரானை ஈருரிவைப் போர்வை யானைப்
புலியதளே யுடையாடை போற்றி னானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 1

1. உரிவை - உரிக்கப்பட்டது: தோல்; அதள் - தோல்; பகலான் - சூரியன்; பாரானை......தீயானானை - அட்டமூர்த்தம் கூறியவாறு. திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றார் என்பது மகுடம்.

சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாங்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 2

2. சவம் - பிணம்; மயானம் - சுடுகாடு; சாம்பல், என்பு, தலையோடு, மயிர்க்கயிறு தரிப்பவர் மாவிரதியர்; பாசுபதம் மாவிரதம் அகச்சமயங்கள், அச்சமயங்களின் தலைவராயிருப்பவரும் சிவபெருமானே என்பது கருத்து; சிவந்தான் - கோபித்தான்.

அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை
அகத்தியனை யுகப்பானை அயன்மால் தேட
நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுண் டானை
நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும்
வென்றானை மீயச்சூர் மேவி னானை
மெல்லியலாள் தவத்தினிறை யளக்க லுற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 3

3. நேரிழைக்கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை - உமாதேவியை ஒருபாகமாகக்கொண்டிருந்தும் பொறிவாயிலைந்து அவித்தவனை; மெல்லியலாள்தவம் - உமாதேவியார் செய்த தவம்.

தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 4

4. சந்தோக சாமவேதம் - சுரங்களின் நிறைவுள்ள சாமவேதம்; சேயானை - எட்டாதவனை.

நற்றவத்தின் நல்லானைத் தீதாய் வந்த
நஞ்சமுது செய்தானை அமுத முண்ட
மற்றமரர் உலந்தாலும் உலவா தானை
வருகாலஞ் செல்காலம் வந்த காலம்
உற்றவத்தை யுணர்ந்தாரும் உணர லாகா
ஒருசுடரை இருவிசும்பி னூர்மூன் றொன்றச்
செற்றவனைத் திருவீழி மிழலை யானைச்
சேரா தார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 5

5. அமுதம் உண்ட............உலவாதானை - அமுதம் உண்டு தேவர்கள் இறக்கவும் தான் நஞ்சையுண்டும் இறவாதவனை.

மைவான மிடற்றானை அவ்வான் மின்போல்
வளர்சடைமேல் மதியானை மழையா யெங்கும்
பெய்வானைப் பிச்சாட லாடு வானைப்
பிலவாய பேய்க்கணங்க ளார்க்கச் சூலம்
பொய்வானைப் பொய்யிலா மெய்யன் தன்னைப்
பூதலமும் மண்டலமும் பொருந்தும் வாழ்க்கை
செய்வானைத் திருவீழி மிழலை யானைச்
சேரா தார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 6

6. மைவானம் - கரியமேகம்; பிச்சு - பித்து; பிலவாய பேய்க் கணம் - குகைபோலும் வாயுடைய பேய்க்கூட்டம்.

மிக்கானைக் குறைந்தடைந்தார் மேவ லானை
வெவ்வேறாய் இருமூன்று சமய மாகிப்
புக்கானை எப்பொருட்கும் பொதுவா னானைப்
பொன்னுலகத் தவர்போற்றும் பொருளுக் கெல்லாந்

தக்கானைத் தானன்றி வேறொன் றில்லாத்
தத்துவனைத் தடவரையை நடுவு செய்த
திக்கானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 7

7. மேவலானை - பொருந்ாதவனை; இருமூன்றுசமயம் - அறுவகைப்பட்ட சமயம்; அறுவகைச்சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் உள்ளான் என்பது; தானன்றி வேறொன்றில்லாத் தத்துவன் - கலப்பினால் உலகெலாமாகிநிற்கும் நிலை.

வானவர்கோன் தோளிறுத்த மைந்தன் தன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை யொருநாட் பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனைக் கயிலாயம் மேவி னானைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க் கென்றுந்
தேனவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 8

8. வானவர்கோன் - இந்திரன்; பார்த்தன்.........கானவன் - அருச்சுனனுக்கு அருள்செய்ய வேடவடிவம்கொண்டு சென்றது.

பரத்தானை யிப்பக்கம் பலவா னானைப்
பசுபதியைப் பத்தர்க்கு முத்தி காட்டும்
வரத்தானை வணங்குவார் மனத்து ளானை
மாருதமால் எரிமூன்றும் வாய்அம் பீர்க்காஞ்
சரத்தானைச் சரத்தையுந்தன் தாட்கீழ் வைத்த
தபோதனனைச் சடாமகுடத் தணிந்த பைங்கட்
சிரத்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 9

9. மாருதம் மால் எரி வாய் அம்பு ஈர்க்காம் சரம் - முன் விளக்கப்பட்டது: இது எதிர்நிரல்நிறை. சரத்தையும் தன் தாள் கீழ் வைத்த தபோதனன் - அச்சரத்தையும் பயன்படுத்தாமல் தன் தாள்கீழ் வைத்துச் சிரித்துப் புரமெரித்தவன் என்பது; 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில், ஓரம்பே முப்புர முந்தீபற, ஒன்றும் பெருமிகை உந்தீபற' என்ற திருவாசகமுங் காண்க.

அறுத்தானை அயன்தலைகள் அஞ்சி லொன்றை
அஞ்சாதே வரையெடுத்த அரக்கன் தோள்கள்
இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
இந்துவினைத் தேய்த்தானை இரவி தன்பல்
பறித்தானைப் பகீரதற்கா வானோர் வேண்டப்
பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாங்குச்
செறித்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 10

10. இந்து - சந்திரன்; சந்திரனைத் தேய்த்ததும், சூரியன் பற்களையுடைத்ததும் தக்கயாகத்தில்; பகீரதற்கா......செறுத்தானை - பகீரதன் வேண்டுகோளுக்காக ஆயிரமுகமாகவந்த கங்கையைப் பனிபோலாகும்படிச் செய்தவரலாறு.

திருச்சிற்றம்பலம்.

## 20. திருத்தாண்டகம் (சூ)

### இராகம் — ஹரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத் துளார் காளத்தியார்
மயிலாடு துறையுளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரம்மாற் கீந்தார் வாய்ந்த
அயில்வாய சூலமுங் காபா லமும்
அமருந் திருக்கரத்தார் ஆனே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே. 1

1. மயிலாடுதுறை - மாயூரம்; அயில் - கூர்மை; காபாலம் - கபாலம்; நீறு - விபூதி.

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவி னாரே. 2

2. பூதி - விபூதி; கேதீச்சரம் இது ஈழநாட்டுத்தலம்.

அண்ணா மலையமர்ந்தார் ஆரூ ருள்ளார்
அளப்பூரார் அந்தணர்கள் மாடக் கோயில்
உண்ணா ழிகையார் உமையா ளோடும்
இமையோர் பெருமானார் ஒற்றி யூரார்
பெண்ணா கடத்துப் பெருந்தூங் கானை
மாடத்தார் கூடத்தார் பேரா வூரார்
விண்ணோர்க ளெல்லாம் விரும்பி யேத்த
வீழி மிழலையே மேவி னாரே. 3

3. உண்ணாழிகை - கர்ப்பக்கிருகம்; பெண்ணாகடம் தலப் பெயர்; தூங்கானைமாடம் கோயிற்பெயர்.

வெண்காட்டார் செங்காட்டங் குடியார் வெண்ணி
நன்னகரார் வேட்களத்தார் வேத நாவார்
பண்காட்டும் வண்டார் பழனத் துள்ளார்
பராய்த்துறையார் சிராப்பள்ளி யுள்ளார் பண்டோர்
வெண்கோட்டுக் கருங்களிற்றைப் பிளிறப் பற்றி
யுரித்துரிவை போர்த்த விடலை வேடம்
விண்காட்டும் பிறைநுதலி அஞ்சக் காட்டி
வீழி மிழலையே மேவி னாரே. 4

4. பிறை நுதலி-பிறைச்சந்திரன்போன்ற நெற்றியையுடைய உமாதேவி.

புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமா டுவார்
உடைசூழ்ந்த புலித்தோலர் கலிக்கச் சிமேற்
றளியுளார் குளிர்சோலை யேகம் பத்தார்

கடைசூழ்ந்து பலிதேருங் கங்காளனார் கழுமலத்தார்
செழுமலர்த்தார்க் குழலி யோடும்
விடைசூழ்ந்த வெல்கொடியார் மல்கு செல்வ
வீழி மிழலையே மேவி னாரே. 5

5. செழுமலர்த்தார்க்குழலி - செழுமையான மலராலாகிய மாலையையணிந்த குழலையுடைய உமாதேவி; கங்காளம்-முழுஎலும்பு.

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழிய்யார்
பெரும்பற்றப் புலியூர்மூ லட்டா னத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்ப ரார்ஈங்கோய் மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார்
கருப்பறிய லூரார் கரவீ ரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவி யேத்த
வீழி மிழலையே மேவி னாரே. 6

6. பாழிய்யார் யகரமெய் விரித்தல் விகாரம்; பெரும்பற்றப் புலியூர் என்பது சிதம்பரம்.

மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர் மேயார்
வாழ்கொளி புத்தூரார் மாகா ளத்தார்
கறைக்காட்டுங் கண்டனார் காபா லிய்யார்
கற்குடியார் விற்குடியார் கானப் பேரார்
பறைக்காட்டுங் குழிவிழிகண் பல்பேய் சூழப்
பழையனூர் ஆலங்காட் டடிகள் பண்டோர்
மிறைக்காட்டுங் கொடுங்காலன் வீடப் பாய்ந்தார்
வீழி மிழலையே மேவி னாரே. 7

7. கறை - விடம்; காபாலிய்யார் விரித்தல் விகாரம்; மிறை - வலிமை.

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
ஆரூரார் பேரூரார் அழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை அயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னாரே. 8

8. நஞ்சைத் தமக்கு அமுதா உண்ட நம்பர் - மற்றவரைக் கொல்லும் நஞ்சு சிவபெருமானுக்கு அமுதாயிற்று என்பது; வெஞ்சொற் சமண்சிறையில் என்னை மீட்டார் என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் சரிதத்துக்கு அகச் சான்று.

கொண்ட லுள்ளார் கொண்டீச் சரத்தினுள்ளார்
கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்
தண்டலையார் தலையாலங் காட்டி லுள்ளார்
தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கி னார்தாம்
வண்டலொடு மணற்கொணரும் பொன்னி நன்னீர்
வலஞ்சுழியார் வைகலின்மேல் மாடத் துள்ளார்
வெண்டலைமான் கைக்கொண்ட விகிர்த வேடர்
வீழி மிழலையே மேவி னாரே. 9

9. பொன்னி - காவிரி; தண்டலை - தண்டலைநீணெறி என்னும் தலம்.

அரிச்சந் திரத்துள்ளார் அம்ப ருள்ளார்
அரிபிரமர் இந்திரர்க்கும் அரிய ரானார்
புரிச்சந் திரத்துள்ளார் போகத் துள்ளார்
பொருப்பரையன் மகளோடு விருப்ப ராகி
எரிச்சந் திரவேட்கு மிடத்தார் ஏம
கூடத்தார் பாடத்தே னிசையார் கீதர்
விரிச்சங்கை யெரிக்கொண்டங் காடும் வேடர்
வீழி மிழலையே மேவி னாரே. 10

10. விரிச்சு - விரித்து; போலி.

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்
பூவணத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க
தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்
தலைகளொடு மலைகளென்ன தாளுந் தோளும்
பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்
பொருப்பதன்கீழ் நெரித்தருள்செய் புவன நாதர்
மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்
வீழி மிழலையே மேவி னாரே. 11

11. வரை - மலை; எடுக்கலுற்றான் - எடுத்த இராவணன். இப்பதிகத்துள் வைப்புத்தலங்கள் பல போற்றப்பட்டுள்ளன.

திருச்சிற்றம்பலம்.

## 21. திருத்தாண்டகம் (எ)

திருச்சிற்றம்பலம்

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டு கின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்
மண்ணவன்காண் தீயவன்காண் நீரா னான்காண்
வந்தலைக்கும் மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 1

1. கண்ணவன் காண் கண் ஒளிசேர் காட்சியான் - ஆன்மாக்களுக்குக் கண்ணாயிருப்பவனும் கண் ஒளி சென்று பற்றும் காட்சிப் பொருளாயிருப்பவனும் அவனே என்பது; பஞ்சேந்திரியங்களுள் கண் சென்று அறியுந்தன்மையுடையது; மற்றயவை தம்மையடைந்தவைகளை அறியுந் தன்மையுடையன; ஆதலின் கண் ஒளிசேர் காட்சியான் என்றார்.

ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமூன் றெரிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர்நறுநெய் யாடி னான்காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

2. ஆலைப்படு............நாமத்தான் - ஆலையில் ஆட்டப்பட்ட கருப்பஞ்சாறு போல மதுரிக்கும் ஐந்தெழுத்தின் பொருளாயுள்ளான்; பாண்டரங்கம் சிவபெருமான் ஆடும் கூத்தினுள் ஒன்று; வேலை - கடல்.

தண்மையொடு வெம்மைதா னாயி னான்காண்
சக்கரம் புட்பாகற் கருள்செய் தான்காண்
கண்ணுமொரு மூன்றுடைய காபா லிகாண்
காமனுடல் வேவித்த கண்ணி னான்காண்
எண்ணில்சமண் தீர்த்தென்னை யாட்கொண் டான்காண்
இருவர்க் கெரியா யருளி னான்காண்
விண்ணவர்கள் போற்ற இருக்கின் றான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 3

3. புட்பாகன் - கருடவாகனனாகிய திருமால்; சமண் தீர்த்து என்பது அப்பர் வரலாற்றை அறிவிக்கும் அகச்சான்று.

காதிசைந்த சங்கக் குழையி னான்காண்
கனக மலையனைய காட்சி யான்காண்
மாதிசைந்த மாதவமுஞ் சோதித் தான்காண்
வல்லேன வெள்ளெயிற்றா பரணத் தான்காண்
ஆதியன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
ஐந்தலைமா நாகம்நாண் ஆக்கி னான்காண்
வேதியன்காண் வேதவிதி காட்டி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 4

4. கனகமலை - பொன்மலை: மேருமலை; ஏனம் - பன்றி.

நெய்யினொடு பாலிளநீ ராடினான் காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமா னேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னான்காண்
வெய்யகனல் விளையாட் டாடி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 5

5. மணவாளன் - இத்தலத்து இறைவன் திருக்கோலம்.

கண்துஞ்சுங் கருநெடுமால் ஆழி வேண்டிக்
கண்ணிடந்து சூட்டக்கண் டருளு வான்காண்
வண்டுண்ணும் மதுக்கொன்றை வன்னி மத்தம்
வான்கங்கை சடைக்கரந்த மாதே வன்காண்
பண்தங்கு மொழிமடவாள் பாகத் தான்காண்
பரமன்காண் பரமேட்டி யாயி னான்காண்
வெண்திங்கள் அரவொடுசெஞ் சடைவைத் தான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 6

6. இப்பாசுரத்தும் தலவரலாறு சுருக்கிக் கூறப்பட்டது காண்க. கண் துஞ்சும் - அறிதுயில் செய்யும்.

கற்பொலிதோள் சலந்தரனைப் பிளந்த ஆழி
கருமாலுக் கருள்செய்த கருணை யான்காண்
விற்பொலிதோள் விசயன்வலி தேய்வித் தான்காண்
வேடுவனாய்ப் போர்பொருது காட்டி னான்காண்

தற்பரமாந் தற்பரமாய் நிற்கின் ளூன்காண்
சதாசிவன்காண் தன்னொப்பா ரில்லா தான்காண்
வெற்பரையன் பாவை விருப்பு ளான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 7

7. 'சலந்தரனைப் பிளந்த ஆழி' முன் தலவரலாற்றுட்காண்க.

மெய்த்தவன்காண் மெய்த்தவத்தில் நிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா இருப்புமன வினையர்க் கென்றும்
பொய்த்தவன்காண் புத்தன் மறவா தோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்
உய்த்தவன்காண் உயர்கதிக்கே உள்கி னாரை
உலகனைத்தும் ஒளித்தளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 8

8. மெய்த்தவத்தில் நிற்பார்க்கு எல்லாம் மெய்த்தவன் என்க; இருப்புமனம் - இரும்புபோலக் கடிய கனம்; புத்தன் - சாக்கிய நாயனார்; திருநாவுக்கரசு நாயனாரால் போற்றப்பட்டவர்களுள் இவர் ஒருவர்.

சந்திரனைத் திருவடியால் தளர்வித் தான்காண்
தக்கனையும் முனிந்தெச்சன் தலைகொண் டான்காண்
இந்திரனைத் தோள்முரிவித் தருள்செய் தான்காண்
ஈசன்காண் நேசன்காண் நினைவோர்க் கெல்லாம்
மந்திரமும் மறைப்பொருளு மாயி னான்காண்
மாலொடயன் மேலொடுகீழ் அறியா வண்ணம்
வெந்தழலின் விரிசுடராய் ஓங்கி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 9

9. சந்திரனைத் திருவடியால் தளர்வித்தது, தக்கனை முனிந்து எச்சன் தலைகொண்டது, இந்திரனைத் தோள் முரிவித்தது எல்லாம் தக்கயாகத்தில்; இதனை, "சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில் இந்திரனைத் தோள் நெரித்திட் டெச்சன் தலையரிந்து" எனவரும் திருவாசகம் திருவம்மானைப் பாசுரத்தாலுமறிக.

ஈங்கைப்பேர் ஈமவனத் திருக்கின் றான்காண்
எம்மான்காண் கைம்மாவி னுரிபோர்த் தான்காண்
ஓங்குமலைக் கரையன்றன் பாவை யோடும்
ஒருருவாய் நின்றான்காண் ஓங்கா ரன் காண்
கோங்குமலர்க் கொன்றையந்தார்க் கண்ணி யான்காண்
கொல்லேறு வெல்கொடிமேற் கூட்டி னான்காண்
வேங்கைவரிப் புலித்தோல்மே லாடை யான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 10

10. ஈங்கை - இண்டங்கொடி; ஈமவனம் - சுடுகாடு; கைம்மா - யானை; உரி - தோல்.

திருச்சிற்றம்பலம்.

## 22. திருத்தாண்டகம் (அ)

திருச்சிற்றம்பலம்

மானேறு காமுடைய வாதர் போலும்
மால்வரைகால் வளைவில்லா வளைத்தார் போலும்
கானேறு கரிகதற வுரித்தார் போலுங்
கட்டங்கங் கொடிதுடிகைக் கொண்டார் போலும்

தேனேறு திருஇதழித் தாரார் போலுங்
திருவீழி மிழலையமர் செல்வர் போலும்
ஆனேற தேறும் அழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 1

1. வாதர் - அருள் செய்பவர்; இதழி - கொன்றை; கட்டங்கம் - மழு.

சமரமிகு சலந்தரன்போர் வேண்டி னனைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலும்
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலுங்
குமரனையும் மகனாக வுடையார் போலுங்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்கள்பின் அமுதுணநஞ் சுண்டார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 2

2. சமரம் - யுத்தம்; நாரணனை இடப்பாகத்தடைத்தார் - 'பிறைசங்கு சடையானை வலத்தே வைத்து' என்பது ஆழ்வார் பாசுரம்; குமரன் - முருகப்பெருமான்; குழகர் - அழகர்.

நீறணிந்த திருமேனி நிமலர் போலும்
நேமிநெடு மாற்கருளிச் செய்தார் போலும்
ஏறணிந்த கொடியுடையெம் மிறைவர் போலும்
எயில்மூன்றும் எரிசரத்தா லெய்தார் போலும்
வேறணிந்த கோலமுடை வேடர் போலும்
வியன்வீழி மிழலையுறை விகிர்தர் போலும்
ஆறணிந்த சடாமகுடத் தழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 3

3. நேமி - சக்கரம்; சரம் - பாணம்.

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலுந்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்க மானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 4

4. கைவேழமுகத்தவன் - விநாயகக்கடவுள்.

துன்னத்தின் கோவணமொன் றுடையார் போலுஞ்
சுடர்மூன்றுஞ் சோதியுமாய்த் தூயார் போலும்
பொன்னொத்த திருமேனிப் புனிதர் போலும்
பூதகணம் புடைசூழ வருவார் போலும்
மின்னொத்த செஞ்சடைவெண் பிறையார் போலும்
வியன்வீழி மிழலைசேர் விமலர் போலும்
அன்னத்தேர் அயன்முடிசேர் அடிகள் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 5

5. துன்னம் - தைத்தது, அன்னமாகிய தேர் என்க.

மாலாலும் அறிவரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார் போலும்
நாலாய மறைக்கிறைவ ரானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்

வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
ஆலாலம் மிடற்றடக்கி அளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 6

6. நாம எழுத்தஞ்சு - ஸ்ரீபஞ்சாட்சரம்; வேலார்கை வீரியை முன்படைத்தது தக்கயாகத்தை அழித்தற்பொருட்டு; ஆலாலம் - விடம்.

பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர் போலும்
பைந்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீல கண்டர் போலும்
வடகயிலை மலையுடைய மணாளர் போலுஞ்
செஞ்சடைக்கண் வெண்பிறைகொண் டணிந்தார் போலுந்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 7

7. மஞ்சு - மேகம்; அஞ்சு - பஞ்சேந்திரியம்.

குண்டரொடு பிரித்தெனையாட் கொண்டார் போலுங்
குடமூக்கி லிடமாக்கிக் கொண்டார் போலும்
புண்டரிகப் புதுமலரா தனத்தார் போலும்
புள்ளரசைக் கொன்றுயிர்பின் கொடுத்தார் போலும்
வெண்டலையிற் பலிகொண்ட விகிர்தர் போலும்
வியன்வீழி மிழலைநக ருடையார் போலும்
அண்டத்துப் புறத்தப்பா லானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 8

8. புண்டரிகப் புதுமலர் ஆதனத்தார் - அடியாரது இதய தாமரையை இடமாக்கொண்டவர்; 'மலர்மிசை ஏகினன்' என்பது குறள். புள் அரசு - கருடன்.

முத்தனைய முகிழ்முறுவ லுடையார் போலும்
மொய்பவளக் கொடியனைய சடையார் போலும்
எத்தனையும் பத்திசெய்வார்க் கினியார் போலும்
இருநான்கு மூர்த்திகளு மானார் போலும்
மித்திரவச் சிரவணற்கு விருப்பர் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அத்தனொடும் அம்மையெனக் கானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 9

9. எத்தனையும் - என்ன அளவும்: சிறிதும் என்னும் பொருட்டு; முறுவல் - புன்சிரிப்பு; இருநான்கு மூர்த்திகள் - அட்ட மூர்த்திகள்; ஐம்பூதம், சூரியன், சந்திரன், ஆன்மா. மித்திரன் - நண்பன்; வச்சிரவணன் - குபேரன்.

கரியுரிசெய் துமைவெருவக் கண்டார் போலுங்
கங்கையையுஞ் செஞ்சடைமேற் கரந்தார் போலும்
எரியதொரு கைதரித்த இறைவர் போலும்
ஏனத்தின் கூனெயிறு பூண்டார் போலும்
விரிகதிரோ ரிருவரைமுன் வெகுண்டார் போலும்
வியன்வீழி மிழலையமர் விமலர் போலும்
அரிபிரமர் துதிசெயநின் றளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 10

10. வெருவ - அஞ்ச; ஏனம் - பன்றி; கூன்எயிறு - வளைந்த பல்; கதிரோர் இருவர் - சூரிய சந்திரர்.

கயிலாய மலையெடுத்தான் கதறி வீழக்
கால்விரலால் அடர்த்தருளிச் செய்தார் போலும்
குயிலாய மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக்
கூத்தாட வல்ல குழகர் போலும்
வெயிலாய சோதிவிளக் கானார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அயிலாய மூவிலைவேற் படையார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 10

11. அயில் - கூர்மை; மூவிலை வேற்படை - சூலம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

## 23. பண் – சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

நம்பி னார்க்கருள் செய்யும் அந்தணர்
நான்ம றைக்கிடம் ஆய வேள்வியுள்
செம்பொனேர் மடவார் அணிபெற்ற திருமிழலை
உம்ப ரார்தொழு தேத்த மாமலை
யாளொ டும்முட னேஉ றைவிடம்
அம்பொன் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 1

1. நான்மறைக்கு இடமாயவேள்வி - நான்கு வேதங்களிலும் விதிக்கப்பட்டபடி நடைபெறும் யாகம்; 'வேத வேள்வி' என்றார் சம்பந்தப்பிள்ளையாரும்; செம்பொன் நேர்மடவார் அணி பெற்ற - சிவந்த இலக்கு போலும் பெண்களால் அழகுபெற்ற; யாகம் செய்யும்போது பத்தினிகளும்கூட இருத்தல் மரபு; மிழலை(யுள்) வீழி (மாத்தை) இடமாகக்கொண்டீர்; அடியேனுக்கும் அருளிவீராக என்க. தலவிருட்சம் வீழிமரம்; மிழலைக்கூற்றம் நாட்டின் ஒருபகுதி.

விடங்கொள் மாமிடற் றீர்வெள் ளைச்சுருள்
ஒன்றிட் டுவிட்ட காதி னீர்என்று
திடங்கொள் சிந்தையினார் கலிகாக்குந் திருமிழலை
மடங்கல் பூண்ட விமான மண்மிசை
வந்தி ழிச்சிய வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 2

2. சுருள் - பெண்கள் காதில்அணியும் அணி; திடம் - உறுதி; கலி - நுகரும் பொருள் இன்மையால் வரும் வருத்தம்; கலிகாத்தது முன்படிக்காசு வைத்த சரிதம் குறித்தது; மடங்கல் - சிங்கம்; அடங்கல் - முழுவதும்.

ஊனை உற்றுயிர் ஆயி னீர்ஒளி
மூன்று மாய்த்தெளி நீரொ டானஞ்சின்
தேனை ஆட்டுகந்தீர் செழுமாடத் திருமிழலை
மானை மேவிய கையி னீர்மழு
ஏந்தி னீர்மங்கை பாகத் தீர்விண்ணில்
ஆன வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 3

3. ஊனை உற்ற உயிர் - உடலிற் பொருந்திய உயிர்; உற்ற உயிர் உற்றுயிர் எனப் பெயரெச்சத்தகரம் தொக்கது; தெளி நீரோடு ஆன் ஐஞ்சி (னோடு) தேனை ஆட்டு உகந்தீர் - தெளிந்த நீரையும் பஞ்சகவ்வியத்தையும் தேனையும் ஆட்டுதலை விரும்பினீர்; ஆட்டுதல் - அபிடேகித்தல்; மழு - மழுப்படை.

பந்தம் வீடிவை பண்ணி னீர்படி
றீர்ம திப்பிதிர்க் கண்ணி யீர்என்று
சிந்தைசெய் திருக்குஞ் செங்கையாளர் திருமிழலை
வந்து நாடகம் வான நாடியர்
ஆடமால் அயன் ஏத்த நாடொறும்
அந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 4

4 பந்தம் வீடிவை பண்ணினீர் - உயிர்களுக்குப் போக மோக்ஷங்களை வைத்தீர்; படிறீர் - வஞ்சகமுடையீர்; மதிப்பிதிர்க் கண்ணியீர் - பிறைச்சந்திரனைத் தலைமாலையாக உடையீர்.

புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில்
ஏந்தி வேதப் புரவித் தேர்மிசைத்
திரிசெய் நான்மறையோர் சிறந்தேத்துந் திருமிழலைப்
பரிசினால் அடி போற்றும் பத்தர்கள்
பாடி ஆடப் பரிந்து நல்கினீர்
அரிய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 5

5. வேதப்புரவித் தேர்மிசை - வேதமாகிய குதிரை பூண்ட தேரின்மேல்; திரிசெய் - திரிதலைச் செய்து; செய் என்பது செய்து என வினையெச்சப் பொருள் தந்து நின்றது: 'வரிப்புனை பந்து' என்பது போல; திரிசெய்(து) வீழிகொண்டீர் என முடிக்க.

எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்துளிவீசுந் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும்
நேசத் தால்உமைப் பூசிக் கும்மிடம்
அறிந்து வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 6

6. எறிந்த சண்டிக்கு ஏற்றம் நல்கியது:- திருமஞ்சனக் குடப் பால் காலாலிடறிச்சிந்தினாரைத் தந்தை எனவே அறிந்தும், மருங்கு கிடந்த கோல்எடுக்க அது மழுவாயிட அத்தந்தையின் இருதாளையும் துணித்த மைந்தராகிய சண்டேசுவரர்க்கு 'நம் பொருட்டால் ஈன்ற தாதை விழஎறிந்தாய் அடுத்ததாதை இனி உனக்கு நாம்' 'அனைத்தும் நாம் உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்கே. சண்டீசனுமாம் பதமும் தந்தோம்' என அருளியது; இடந்த கண்ணப்பனுக்கு ஏற்றம்நல்கியது:- திருக்காளத்தியப்பர் திண்ணனார் பரிவினைக் காட்டத் திருநயனத்தில் ஒன்று துண்ணென உதிரம்பாய இருந்தனர்

அதுகண்ட திண்ணனார் ஊனுக்குஊன் எனும் உரைகண்டு தம் கண் வாங்கி முதல்வன் கண்ணில் அப்பக் குருதிநின்றது. கண்டு மகிழ்ந்து, மற்றக்கண் குருதி பொங்கி மண்டுவது கண்டு, தமது மற்றக் கண் இடக்கும் திண்ணனாரது கையைப்பிடித்துக்கொண்டு திருக் காளத்தி அற்புதர் 'நில்லுகண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப' என மும்முறைகூறி 'என் வலத்தில் மாறிலாய் நிற்க' என்றது.

பணிந்த பார்த்தன் பகீர தன்பல
பத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர்
திணிந்த மாடந்தொறுஞ் செல்வம்மல்கு திருமிழலைத்
தணிந்த அந்தணர் சந்தி நாள்தொறும்
அந்தி வான்இடு பூச்சிறப்பவை
அணிந்து வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 7

7. பணிந்த பார்த்தன் பகீரதன் முதலானார்க்குப் பண்டு நல்கியது பாரதம் இராமாயணங்களிற் காண்க. சந்தி அந்தி - காலையும் மாலையும்.

பரந்த பாரிடம் ஊரிடைப் பலி
பற்றிப் பார்த்துணுஞ் சுற்றம் ஆயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிடம் ஆயதிருமிழலை
இருந்து நீர்தமி ழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தம் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 8

8. பாரிடம் - பூதம்; காசு நித்தம் நல்கியது முன் தலவரலாற்றிற் காண்க.

தூய நீர்அமு தாய வாறது
சொல்லு கென்றுமைக் கேட்கச் சொல்லினீர்
தீயராக்குலை யாளர் செழுமாடத் திருமிழலை
மேய நீர்பலி ஏற்ற தென்னென்று
விண்ணப் பஞ்செய்ப வர்க்கு மெய்ப்பொருள்
ஆய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 9

9. தூயநீர்.........சொல்லினீர் என்பது கண்ணப்பரது வாய் நிறைந்த நீர் காளத்தியப்பருக்கு அபிடேகப் பொருளாயது முதலியவற்றை அநுசிதமென எண்ணி வருந்திய சிவகோசரியாருக்கு அவர் கேட்டுக்கொண்டபடி கனவிற் கூறியது போலும். தீயர் ஆக்கு உலையாளர் - அடுக்களைத் தீயினின் பக்கத்திருந்து உலை ஆக்குபவர்; 'தீவினைக்கு நீர் என்றும் அடைவிலாதீர்' (திருஞா -பு. 567.)

வேத வேதியர் வேத நீதியர்
ஓது வார்விரி நீர்மி ழலையுள்
ஆதி வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுகென்று
நாத கீதம்வண் டோது வார்பொழில்
நாவலூ ரன்வன் றொண்டன் நற்றமிழ்
பாதம் ஓதவல்லார் பரனோடு கூடுவரே. 10

10, ஆதி - ஆதிமூர்த்தியே: விளி; நாதகீதம் வண்டு ஓது- நாத ஓசைபோல வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற; நாவலூரான் வன்றொண்டன் என்பன சுந்தரர் திருநாமங்கள்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.

சலம் - கோபம்; நலம் - உலகத்தைப் பாதுகாக்கும் நன்மை; நயனம் - கண்; இடந்து - தோண்டி.

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணுக்க மாடாமோ.

பங்கயம் - தாமரை; சங்கரன் - சுகத்தைச் செய்பவன்.

திருச்சிற்றம்பலம்.

## சேந்தனுர் அருளிய திருவிசைப்பா

பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த

மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலையின் இழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 1

1. புயல் வணன் - விஷ்ணுமூர்த்தி.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 2

2 'கற்றவர்கள் உண்ணுங் கனியே' என்பது திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம்.

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தையென் மாறிலா மணியைப்
பண்டலர் அயன்மாற் கரிதுமாய் அடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளுங்
கொண்டல்அம் கண்டத் தெங்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. 3

3\. பவளமால் வரை - பெரியபவளமலை; விண்டு அலர் மலர் வாய் வேரி வார் பொழில் - இதழ் விண்டு அலரும் மலரிலிருந்து தேன் ஒழுகும் சோலை; கொண்டல் அம் கண்டத்து - மேகம்போலும் அழகிய கரிய கண்டத்தையுடைய.

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. 4

4\. சசி குலாம் மௌலியை - சந்திரன் குலாவும் சடாமுடியை யுடையவனை.

இத்தெய்வ நெறிநன் றென்றிருள் மாயப்
பிறப்பறு இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் இழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
அறிவரோ அறிவுடை யோரே. 5

5\. இந்திரசாலப் பொய்த்தவ நெறி - இந்திரசாலம் போல உண்மைபோலத் தோன்றிப் பயன்பெறுதற் கில்லாத மற்றைய மார்க்கம்; புராணம் - பழமை.

அக்கனு அனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணங் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனையெண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 6

6. கனு அனைய செல்வம் - கனவுபோலத் தோன்றி அழியும் செல்வம்; ஐவர் - பஞ்சேந்திரியம்.

கங்கைநீ ரரிசிற் கரையிரு மருங்குங்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ இனியே. 7

7. திங்கள் நேர் தீண்ட நீண்டமாளிகை - சந்திரனை நேரே போய்த் தீண்டும்படி உயர்ந்த மாளிகை; தான் தோன்றி நம்பி - சுயம்புமூர்த்தி.

ஆயிரங் கமலம் ஞாயிறு யிரம்முக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்

வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. 8

8. ஆயிரம் கமலம் - ஆயிரம் தாமரை; ஞாயிறு - சூரியன்; பகீரதன் வேண்டுகோளுக்கு இரங்கி ஆயிரமாமுகத்துடன் வந்த கங்கையின் செருக்கினை யடக்க இறைவனும் கண்ணும், முகமும், கையும், பாதமும் ஆயிரம் ஆயிரமாக நின்றனன் என்பது; வேய் இருந்தோளி - மூங்கில் போலும் பெரிய தோளையுடையவள்; போற்றுவார் கழல்கள் போற்றுவார் - அடியார்க்கு அடியார்; புரந்தரன் - இந்திரன்.

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் தோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே. 9

9. இப்பாசுரத்தில் இறைவனது விசுவரூபமும், திருவீழி மிழலையில் ஐந்நூறு அந்தணர்கள் கடவுளைப் பூசித்ததும் கூறப் பட்டுள்ளன. ஏர் - அழகு,

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரம்கரி கருடன்
மறலிவே ளிவர்மிகை செகுத்தோன்

திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 10

10. கதிரோன் - சூரியன்; சலந்தரன் - சலந்தராசுரன்; எச்சன் - யாககருத்தா; அரக்கன் - இராவணன்; மறலி - இயமன்; வேள் - மன்மதன்; மிகை - செருக்கு.

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமுஞ் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்
றாந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தாற் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே. 11

11. உளம் கொள - மனம் கொள்ளும்படி; மதுரக் கதிர் விரித்து - மதுரமாகிய ஒளியை விரித்து; உமாபதியை - சிவ பெருமானை; மழவிடை - இளமை பொருந்திய இடபம்; ஆம்தனை - ஆகும் அளவு; சேந்தன் - முருகன்; களம் கொள அழைத்தால் - கண்டம் கொள்ளும் அளவில் (உரத்து) அழைத்தால்; அடியேன் உறுதியாகக்கொண்ட பொன்மயமான கற்பகம் போலும் பெருமான்; பிழைக்குமோ - தப்பியும் போகுமோ? 'இவன் என்னைப் பன்னாள் அழைப்பு ஒழியான் என்று எதிர்ப்படுமே' என்றார் திருநாவுக்கரசரும்.

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளுங்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. 12

12. பாடு அலங்காரம் - திருப்பாடல்களாகத் தனக்குச்சாத்திய அலங்காரத்திற்கு; பரிசில் காசு அருளி - பரிசிலாகப் படிக்காசுவைத் தருளி; பழுத்த செந்தமிழ் மலர் சூடி - இனிய செந்தமிழ்ப்பாக்களால் ஆகிய மாலையைச்சூடி; எம் பெருமக்கள் என்றது திருஞான சம்பந்தப்பிள்ளையாரையும் அப்பரையும்; கெழுமுதற்கு - கூடுதற்கு.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பல்லாண்டு

பானுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில்வல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பதினொராந்திருமுறை

பாடிய செந்தமி ழாற்பசுங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னுளுள தாய்த்திக் குவலயமே.

அயன்நெடிய மா லும்அவ ரறிவரிய தாணுவரன்
அருளினொடு நீடவனி யிடர்முழுது போயகல
வயலணிதென் வீழிமிழ லையின்நிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன்மதி தோய்கனக
செயநிலவு மாடமதில் புடைதழுவு வாசமலி
செறிபொழில்சு லாவிவளர் சிரபுரசு ரேசன்முதிர்
பயன்நிலவு ஞானதமிழ் விரகன்மறை ஞானமுணர்
பரம்குரு நாதன்மிகு பரசமய கோளரியே.

## பெரியபுராணம்

அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியா ராணர்கள்
எல்லாம் எய்தி உண்கவென
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புகழ்

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிருதாள் அருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

உ

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## திருப்புகலியும் திருவீழிமிழலையும்

**வினாவுரை:** பண் — நட்டபாடை

இராகம்: நாட்டை.] [தாளம்: ரூபகம்.

திருச்சிற்றம்பலம்

மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற
வாணுதன் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்கண்
ஈசவெ னேசவி தென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 1

கழன்மல்கு பந்தொடம் மானைமுற்றில்
கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழின்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும்
புகலி நிலாவிய புண்ணியனே
எழின்மல ரோன்சிர மேந்தியுண்டோர்
இன்புறு செல்வமி தென்கொல்சொல்லாய்
மிழலையுள் வேதிய ரேத்திவாழ்த்த
விண்ணிழி கோயில் விரும்பியதே. 2

கன்னிய ராடல் கலந்துமிக்க
கந்துக வாடை கலந்துதுங்கப்
பொன்னியன் மாட நெருங்குசெல்வப்
புகலி நிலாவிய புண்ணியனே

இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத்
தெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மின்னிய நுண்ணிடை யார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 3

நாகப ணந்திக ழல்குன்மல்கு
நன்னுதன் மான்விழி மங்கையோடும்
பூகவ னம்பொழில் சூழ்ந்தவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
ஏகபெ ருந்தகை யாயபெம்மான்
எம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 4

சந்தள றேறுதண் டங்கொள்கொங்கைத்
தையலொ டுந்தள ராதவாய்மைப்
புந்தியி னுன்மறை யோர்களேத்தும்
புகலி நிலாவிய புண்ணியனே
எந்தமை யாளுடை யீசவெம்மான்
எம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெந்தவெண் ணீறணி வார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 5

சங்கொ லியிப்பி சுறுமகரந்
தாங்கி நிரந்து தரங்கமேன்மேற்
பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப்
புகலி நிலாவிய புண்ணியனே

எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மான்
எம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 6

காமனை ரிப்பிழம் பாகநோக்கிக்
காம்பன தோளியொ டுங்கலந்து
பூமரு நான்முகன் போல்வரேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
ஈமவ னத்தெரி யாட்டுகந்த
எம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வீமரு தண்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 7

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோள்
இற்றல றவ்விர லொற்றியைந்து
புலன்களை கட்டவர் போற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
இலங்கெரி யேந்திநின் றெல்லியாடும்
எம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 8

செறிமுள ரித்தவி சேறியாறுஞ்
செற்றதில் வீற்றிருந் தானுமற்றைப்
பொறியர வத்தணை யானுங்காணப்
புகலி நிலாவிய புண்ணியனே

எறிமழு வோடிள மான்கையின்றி
இருந்தபி ரானிது வென்கொல்சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 9

பத்தர்க ணம்பணிந் தேத்தவாய்த்த
பான்மைய தன்றியும் பல்சமணும்
புத்தரு நின்றலர் தூற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
எத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற
எம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 10

விண்ணிழி கோயில் விரும்பிமேவும்
வித்தக மென்கொ லிதென்றுசொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு
பூங்கொடி யோடிருந் தானைப்போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி
நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப்
பாரொடு விண்பரி பாலகரே. 11

திருச்சிற்றம்பலம்.

109649

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். பி. 300. 2—1—50

O23:38.9116.TV
N50

8B
3-12



ஆறுசடைமே லணிந்தருளும் அண்ணல்வைத்த படிக்காசால்
ஈறிலாத பொருளுடைய இருவருடைய திருமடங்கள்,

—சேக்கிழார்.